Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (30.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 365


செம்மறி ஆடுக்கு இந்த விலையா? (11)


திறமையற்ற நகரசபை... (08)


ஊடகவியலாளருக்கு தடை (05)


சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க (15)

# ஐ.நா.வின் செயற்பாடுகள் மீளாய்வு இலங்கைக்கு சிக்கலை ஏற்படுத்தும்



இலங்கையில் நடந்த போரில் ஐ.நா.வின் மனிதாபிமான மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கடப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் தொடர்பாக மீளாய்வு செய்ய ஐ.நா பொதுச்செயலர் உத்தரவிட்டுள்ளமை இலங்கைக்கு மேலும் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மீளாய்வை மேற்கொள்ள சவூதி அரேபிய நாட்டவரான தொராயா ஒபெய்ட்டை ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இவர், அடுத்த மாதம் ஆரம்பித்து நான்கு மாதங்களுக்குள் தனது பணியை நிறைவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.நா. அதிகாரிகள், அதன் களப்பணியாளர்கள் மற்றும் இலங்கையில் உள்ள நிபுணர்களின் கருத்துகளையும் இவர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

போரின் போது பொது மக்களைப் பாதுகாக்க ஐ. நா.வும் அதன் அமைப்புகளும் தவறிவிட்டதாக ஐ.நா. நிபுணர் குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தது. அத்துடன், போரின் போதான ஐ.நா. வின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

இந்தநிலையிலேயே பான் கீ மூன் தொராயா ஒபெய்ட்டை ஐ.நாவின் செயற்பாடுகளை மீளாய்வுக்காக நியமித்துள்ளதாகவும், இது இலங்கைக்கு மேலும் பல சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்றும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

## அளவெட்டி இளைஞர் சடலமாக மீட்பு

(ஓட்டுசுட்டான்)

ஓட்டுசுட்டான் பகுதியில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த வேலாயுதம் ரஞ்சினிதாஸ் (வயது-21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றைய தினம் காலை வேளை மேசன் வேலைக்குச் செல்வதாக கூறிச் சென்றவரெனவும், பின்னர் இவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியிலுள்ள சிவன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள மாமரத்திலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (101)

## கோண்டாவிலில் பிடிக்கப்பட்டவரை அங்கொடைக்கு மாற்ற உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் மர்ம மனிதன் எனத் தெரிவித்து பொதுமக்களால் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவரை அங்கொடை வைத்தியசாலைக்கு மாற்றுமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி கோண்டாவிலுள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த இரத்தினபுரியைச் சேர்ந்த தனஞ்சே (வயது-20) என்பவரைப் பிடித்த பொதுமக்கள் அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில், குறித்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவரென நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, அவரைத் தெல்லிப்பளை மனநல சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்குமாறும், அது தொடர்பான அறிக்கையினை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இதற்கிணங்க, குறித்த நபர் மனநோயாளி என அறிக்கை

(15ஆம் பக்கம் பார்க்க)

## சவேந்திர சில்வா மீதான வழக்கு கருத்து வெளியிட அமெரிக்கா மறுப்பு

(நியூயோர்க்)

நியூயோர்க்கின் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக அமெரிக்கா கருத்து வெளியிட மறுத்துள்ளது.

வொஷிங்டனில் நேற்று முன்தினம் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில், இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் அம்மையாரிடம், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான வழக்குத் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு அவர், இது நியூயோர்க் நீதிமன்றத்தில் உள்ள சட்டவிவகாரம் என்றும் அது பற்றி மேலதிகமாக தன்னால் கருத்து வெளியிட முடியாது என்றும் பதிலளித்துள்ளார்.

இதனிடையே, ஐ.நாவுக்கான பிரதிநிதி என்ற வகையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு இருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



### குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதான

## மாநகர ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் நேற்றைய கூட்டத்திற்கு சமுகமளித்தார்



(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கொழும்பு நான்காம் மாடியில் குற்றத்தடுப்பு புலனாய்வுத் துறையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு தற்சமயம் புதிய பூசா முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் யாழ்.மாநகர ஆளும் கட்சி உறுப்பினர் முருகையா கோமகன் நேற்றைய யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தார்.

புதிய பூசா தடுப்பு முகாமில் இருந்து சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் அவர் அழைத்து வரப்பட்டு நேற்றைய மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பங்கு பற்றினார்.

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்திற்கு அவர் சமுகமளித்திருந்ததை மாநகரசபையின் அனைத்து உறுப்பினர்களும்

(15ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டியவர் யுத்தக் குற்றவாளி என அறிவிப்பு

(கனடா)

விடுதலைப் புலிகளுக்காக வரி திரட்டிய நபரை கனடா யுத்தக் குற்றவாளியாக அறிவித்துள்ளது. 36 வயதான புவனேசன் துரைராஜா என்ற இலங்கைப் பிரஜை யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் அவரை நாடு கடத்த வேண்டுமெனவும் கனடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப் புலிகள் தம்மை பலவந்தமாக அழைத்துச் சென்றதாக துரைராஜா நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கொலை மிரட்டல் விடுத்து தம்மை அச்சுறுத்தி இயக்கத்தில் இணைத்துக் கொண்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பின்னர் விடுதலைப் புலிகளின் (15ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவிற்கு சென்று திரும்பிய வேளை யாழ். இந்து மாணவன் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுக்கு சரஸ்வதி பூசைக்காக சென்று திரும்பிய வேளை யாழ். இந்துக் கல்லூரி மாணவன் விபத்தில் உயிரிழந்தார்.

முடமாவடி கல்வியங்காட்டைச் சேர்ந்த நல்லைநாதன் தனுஷன் (வயது 14) என்ற ஆண்டு 9 இல் கல்வி கற்கும் மாணவனே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

யாழ். இந்துக் கல்லூரியினால் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் கொண்டாடப்படும் சரஸ்வதி பூசைக்காக சென்று வீடு திரும்பும் வேளை குறிகாட்டுவானில் வைத்து பஸ்ஸில் ஏறும்

(15ஆம் பக்கம் பார்க்க)

**தினமுரசு நாளிதழின் முதலாம் ஆண்டு சிறப்பு மலர் பல வர்ண, பல்சுவை நிரம்பிய அம்சங்களோடு நாளைய தினமுரசு நாளிதழுடன் இலவச இணைப்பாக வெளிவருகிறது.**

## மின் விநியோக சீராக்கலில் ஈடுபட்டவர் மின்சாரம் தாக்கி ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

புதுக்காட்டுச் சந்தியில் மின் விநியோகச் சீராக்கல் பணியில் ஈடுபட்டிருந்தவேளை மின்சாரம் தாக்கி தனியார் நிறுவனமொன்றில் கடந்த மூன்று வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் அனோஜன் (வயது-22) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக அவருடன் பணியாற்றிய சக ஊழியர்கள் தெரிவித்ததாவது,

வழமைபோல் தங்களின் வேலைக்குப் பொறுப்பானவரிடம் இருந்து வந்த தொலைபேசி

(15ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு பல்வேறு சுகநல மேம்பாட்டு திட்டங்கள்



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கத்திற்காக சுகாதார அமைச்சரினால் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரையான வாரம் தேசிய சுகாதார வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு சுகநல மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

முதலாம் நாளான எதிர்வரும் 3 ஆம் திகதி மாவட்ட சுகநல வார ஒருங்கிணைப்புக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அரச அதிபர் அலுவலக கேட்போர் கூடத்திலும், பிரதேச சுகநலவார ஒருங்கிணைப்புக் கூட்டம் பிரதேச செயலர் தலைமையிலும் நடைபெறும்.

3 ஆம் நாளான 5 ஆம் திகதி பாடசாலைகளில் சுகநலம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள், மாணவர்களின் போசாக்கு மதிப்பீடு மற்றும் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான சுகநல விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

4 ஆம் நாளான 6 ஆம் திகதி சகல வைத்தியசாலைகளிலும் 35 வயதிற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை, மாநகர/ நகரப் பகுதிகளில் பொது இடங்களையும், வடிகால்களையும் துப்பரவு செய்தல், சமூக மட்டத்தில் விசேட தேவைக்குட்பட்டோர், விசேட உதவிகள் தேவைப்படும் நோயாளர்களின் விபரங்களைத் திரட்டல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

5 ஆம் நாளான 7 ஆம் திகதி முதியோர்களுக்கான சுகநல விழிப்புணர்வுக் கருத்தரங்கு, இலவச மருத்துவ பரிசோதனை, விளையாட்டுப் போட்டிகள் என்பனவும்,

6 ஆம் நாளான 8 ஆம் திகதி வணக்கத்தலங்களை பரிபாலன சபையினரின் உதவியுடன் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்தல், மேலும் 7 ஆம் நாளான 9 ஆம் திகதி இரத்ததான நிகழ்வுகள் மருத்துவப் பணிப்பாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பொது மக்கள் பங்களிப்புடன் இரத்ததான நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது.

8 ஆம் நாளான 10 ஆம் திகதி மருத்துவப் பணியாளர்களின் கலை நிகழ்ச்சிகள், சிறந்த மருத்துவ பணியாளர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது.

மேற்படி சுகாதார வாரத்தையொட்டி முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர். (உ)

# யாழ்.நூலகத்தில் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

"இலங்கைக்கு மீளத் திரும்புதல்" எனும் தொனிப்பொருளில் கடந்த 300 ஆண்டு கால வரலாற்றை நினைவுபடுத்தும் கண்காட்சி யாழ்.நூலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் 05 முதல் 19 வரை காலை 12 மணி முதல் 7 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதில் காலனித்துவ காலப் பகுதிக்குரிய இலங்கை வரலாற்றை எடுத்து இயம்பக் கூடிய நிலவுருவப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள், புகைப்படங்கள், பிரதிகள் மற்றும் விளக்கங்கள், மாதிரி உருக்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இதனைப் பிரித்தானிய நூலகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இக்கண்காட்சியை www.britishcouncil.lk/exhibition என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

இக்கண்காட்சி கண்டி, காலி ஆகிய இடங்களிலும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கண்டிக்கிறார் சங்கையா

(யாழ்ப்பாணம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ். பழைய பூங்காவை அதன் சுவடுகளே தெரியாமல் இடித்து அழிப்பதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று யாழ். மாநகர சபை உறுப்பினர் இரா.சங்கையா பழைய பூங்கா சுவர் இடிக்கப்பட்டது தொடர்பாக தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது கண்டன அறிக்கையில், மாநகர சபையின் செயற்பாடுகளை கண்டித்துள்ள அவர் மாநகர சபைப் பகுதியில் வடிகால் அமைப்புக்களை மேம்படுத்தல் போன்ற செயற்பா[டு]களுக்கு முன்னுரிமை கொடு[க்க] வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (பா)

# மாநகரசபைக்கு முன்னால் விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் மாநகரசபைக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மினிபஸ், உழவு இயந்திரம் ஆகிய இரண்டும் மோதிக்கொண்டதால் விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கிச் சென்ற மினிபஸ் மாநகர சபைக்குள் நுழைய முற்பட்ட மாநகர சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்துடன் மோதிக்கொண்டது.

இதில் மினிபஸ் பலத்த சேதமடைந்தது. ஆனாலும் சாரதிகளுக்கோ, பயணிகளுக்கோ எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இந்த விபத்தால் வீதியில் போக்குவரத்து சிறிது நேரம் ஸ்தம்பிதம் அடைந்தது. பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டதுடன் போக்குவரத்தை வழமைக்கு கொண்டு வந்தனர்.

இதேவேளை, செம்மணி வீதியில், வலயக் கல்வி அலுவலகத்திற்கு அண்மையில் நேற்று இரவு 6.30 மணியளவில் குறுக்கே பாய்ந்த ஆடு ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் சென்றவர்கள் மோதிக்கொண்டதில் காயத்திற்கு உள்ளாகினர். குறித்த ஆடு ஸ்தலத்திலேயே பலியானது.

யாழ். நகரில் அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்த அளவில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்து வண்டி எதிரே வந்த ஆட்டோவுடன் மோதியதில் ஆட்டோ சாரதியான இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

தாவடிச் சந்திப்பகுதியில் நேற்று மதியம் 2.15 மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்தில் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் சிவகுமார் (வயது 29) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## மது போதையால் 7 ஆயிரம் ரூபா தண்டம்

(கோப்பாய்)

மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்திய நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரினால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். மது போதையில் வாகனத்தைச் செலுத்தியமையால் 3500 ரூபாவும், காப்புறுதி இல்லாமையினால் 1500 ரூபாவும் அபராதம் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (எஸ்)

# கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் நேற்று திறந்து வைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்துக்கான புதிய கட்டடம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற நீதிபதி கே.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம நீதியரசர் திருமதி சிராணி பண்டாரநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், நீதி அமைச்சின் செயலாளர் செ.சுகத கம்லத், மேல் நீதிமன்ற நீதிபதிகளான ஜே.விஸ்வநாதன், டி.எம்.அமரக்கோன் மற்றும் பல்வேறு மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள், மாவட்ட அரச அதிபர், அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். (உ.7)

# குற்றச் செயல் புரிந்த சிறுவன் சீர்திருத்தப் பள்ளியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இருபதாயிரம் ரூபா பெறுமதியான இரும்பு திருடிய சிறுவன் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். கே.கே.எஸ் வீதிப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர் வீட்டினுள் நேற்றுக்காலை இரும்பு திருடிய பொம்மை வெளிப் பகுதியைச்சேர்ந்த சிறுவனே அரியாலை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா குறித்த சிறுவனைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்புமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (எஸ்)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### மாணவர்களுக்கான தங்குமிட வசதி

புதிய கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்த புதுமுக மாணவர்கள் பெருமளவில் வருகை தரவுள்ளார்கள். மேற்படி மாணவர்கள் தமது உயர்கல்வியைத் தடையின்றி தொடர்வதற்கு அவர்களுக்கான தங்குமிட வசதி நல்ல முறையில் அமைவது இன்றியமையாததாகும்.

ஆகவே எமது பிரதேசத்தின் வளர்ச்சியிலும், மாணவர்களின் எதிர் காலத்திலும் அக்கறை கொண்டுள்ள பொதுமக்கள் எமது பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் தேவைக்காக,

1. தமது வீடுகளை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்
2. தமது வீடுகளில் அறைகளை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்

(மேற்படி தங்குமிட வசதியை எமது மாணவர்களுக்கு வழங்கும் வீட்டுரிமையாளர்கள் அல்லது அங்கு தங்கும் மாணவர்கள் வாடகை அடிப்படையில் பல்கலைக்கழகத்திலிருந்து கட்டில்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்)

உதவிப்பதிவாளர் - நலச்சேவைகள் அவர்களுடன் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ, 021-222-6716 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கனவே மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய வீட்டுரிமையாளர்கள் அவ்வசதியைத் தொடர்ந்து வழங்கும்படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C/582) 29.09.2011



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### அறிவித்தல்

### பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2010/2011 புதிய மாணவர்களை பதிவு செய்தலைப் பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 06.10.2011 அன்று நடைபெறவிருப்பதால் அன்றைய தினம் புதிய மாணவர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் நடைபெற மாட்டாது.

மீண்டும் 10.10.2011 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் புதிய மாணவர்களைப் பதிவுசெய்தல் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறேன்.

மேலதிக விபரங்களுக்கு 021-2226714 என்ற தொலைபேசி எண் ஊடாக அனுமதிகள் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்,
29.09.2011 (C/968)

அமைதியையும், ஆசிகளையும் தன்னுடன்கொண்டுவராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவும் இல்லை என்பதால் அமைதியையும் ஆசிகளையும் வாழ்க்கையில் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

- பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அறிவிலோங்கி இவ் வையம் தழைக்க...

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' என்று சொன்னவன் செத்தும் தொண்ணூறு வருடங்களாகிவிட்டது. இன்னும் அறிவிலோங்கி இவ்வுலகு தழைப்பதற்கு உரிய வகைகளைச் செய்ய நாம் முழு இசைவு தெரிவிப்பவர்களாக இல்லை. மொழி இன ரீதியாகக் கட்சிகள் அமைத்து மக்கள் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றுவிட முடியும். வர்க்க ரீதியாகவும் கட்சிகள் அமைத்து தலைமைகளை உருவாக்க முடியும். சாதி ரீதியாகவும் இன்று கட்சிகள் தலைமைகள் உருவாக முடியும்.

ஆனால், உலக மக்கள் தொகையில் பாதிப் பங்கிருக்கும் பெண்கள் தங்களுக்கென தனியே கட்சி அமைத்து தலைவர்களாகி நாடாளுமன்றம் செல்வதோ அரசியல் அதிகாரம் பெறுவதோ இன்னும் நடைபெறுவதாக இல்லை. அந்தளவுக்கு இன்னமும் ஆண்முதன்மையை விட்டுக் கொடுக்க மாட்டாததாகவே உள்ளது சமூகம்.

அரசியல் ரீதியான அதிகாரமளிப்பு என்று மட்டுமல்ல, சமூக அங்கீகாரம், தொழிற்துறை மற்றும் இதர தனியார் அமைப்புகளிலும் பெண்கள் அதிகாரம் பெறுவது என்பது இன்றளவும் அபூர்வமான நிகழ்வாகவே இருக்கிறது. இதற்குப் பல வகையான காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் சில பண்பாடு சார்ந்த காரணங்கள் – பழமை வாதம், ஆண் மையப் பார்வை, அந்நியப் படையெடுப்பின் விளைவுகள் நம் பண்பாட்டைப் பாதித்தமை, சாதி அமைப்பு, தவிர மேலும் பல பண்பாட்டுக் காரணிகளும் சொல்லப்படுகிறது.

கோட்பாட்டு ரீதியான அலசல்களிலும் வரையறுப்புகளிலும் மட்டும் தேங்கிநில்லாமல், செயல்முறையில் உடனடியாகவும் எளிதாகவும் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகள் ஆழ்ந்த பண்பாட்டு மாறுதல்களைக் கொணரும் என்பது பல நாடுகளில் கண்டறியப்பட்ட உண்மையாக உள்ளது.

உதாரணமாக, பெண்களுக்கு உயர்கல்வி அளிப்பது அதிகரிக்க அதிகரிக்க, பிறப்பு விகிதம் வீழ்கிறது. இதை மக்கள்தொகைக் கணக்கியலாளர்கள் பல நாடுகளில் நடந்த சமூக மாற்றமென நிறுவி இருக்கிறார்கள். உலகில் இன்னமும் மிகையான பிறப்பு விகிதம் உள்ள நாடுகள் பெரும்பாலும் பெண் கல்வி அதிகம் இல்லாத நாடுகளாக இருப்பதைக் காணலாம்.

வளரும் நாடுகளில் பெண்கள் அதிகாரப் பதவிகளுக்கு வரத் தொடங்கியிருப்பது அண்மைக் காலங்களில்தான். ஆனால் வளர்ந்த நாடுகளிலும் கூட இந்நிலையே காணப்படுகிறது. நியூயோர்க் டைம்ஸின் ஒரு ஆய்வின்படி, 2009–ஆம் வருடத்தில் ஐரோப்பிய யூனியனின் முக்கியமான 300 நிறுவனங்களில், நிர்வாகக் குழுக்களில் உள்ள பெண்கள் 9.7 சதவீதத்தினர் மட்டுமே. அமெரிக்காவின் பெரும் நிறுவனங்களில், 15 சதவிகித நிர்வாகக்குழு அங்கத்தினர்கள்தாம் பெண்கள். ஜப்பானிலோ முக்கிய நிறுவனங்களில் 1.4 வீதம் மட்டுமே.

பேறு காலம், குழந்தைப் பராமரிப்பு ஆகியனவற்றுக்காக வேலையிலிருந்து லீவிலோ, அல்லது தற்காலிகமாக நீங்கியோ விலகிப் போகும் பல பெண்கள், பேறுகாலம் முடிந்தவுடனோ, குழந்தைகள் ஓரளவு வளர்ந்து பள்ளிக்குப் போகத் தொடங்கியவுடனோ தம் பணிகளில் மீண்டும் இணைவதில்லை. இது கீழை நாடுகளுக்கு மட்டுமே உரிய எண்ணப்போக்கு அல்ல. மிக வளர்ச்சி அடைந்த ஜெர்மனியிலும் கூட குழந்தைகளுடன் வீட்டில் இருக்காமல் வேலைக்குப் போக முயலும் பெண்கள் சமூகத்தில் விமர்சனத்துக்கும் கேலிக்கும் ஆளாகிறர்கள். இப்படி குழந்தைகளைப் பார்ப்பதற்காக வேலையை விடுவதை இரு பாலரில் பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்பதை அனேகமாக மொத்த சமூகமும் இயல்பாகவே நம்புகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இதை நிறைய பெண்களும் நம்புவது வேறொரு விதப் பிரச்சினை.

பெண்களின் எண்ணிக்கை எந்த சமுதாயத்திலும், நாட்டிலும் அனேகமாக ஆண்களின் எண்ணிக்கையை ஒத்ததே. பெண்களின் பார்வை என்பதோடு, அனுபவம், தேர்வுகள், அறிவுச் சேமிப்பு, மதிப்பீடுகள் ஆகியன இல்லாத எந்தப் பொருளாதார, பண்பாட்டு, அறிவுச் சேமிப்பு நடவடிக்கையும் வேண்டுமென்றே ஒரு கண்ணைக் குருடாக்கிக் கொள்வதற்கு ஒப்பானதாகும். இப்படி பெண்களைப் புறந்தள்ளிய அணுகல் நீண்ட காலக் கணக்கில் சமுதாயங்களைப் பின் தங்கிய சமுதாயங்களாகவே ஆக்கின என்பதை நாம் வரலாறெங்கும் காணமுடியும்.

ஒரு பெண்ணை சமுதாயம் எப்படிப் பார்க்கிறது என்பது அச்சமுதாயத்தின் மொத்தப் பெண்களின் முன்னேற்றத்துக்கும் அடிப்படையான வேர். இதற்காகவும் பெண்களை இத்தகைய உயர்பதவிகளில் அமர்த்துவது மிகச் சிறந்த ஒரு நடவடிக்கையே. பெண்களின் பொது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் சமூகத்துக்கு நன்மை பயக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை.

– ஆசிரியர்

# விளக்கமறியலில் இருந்துகொண்டே வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி

(கொழும்பு)

விளக்கமறியலில் இருந்து கொண்டே, ஜப்பான் மற்றும் இத்தாலியில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக மக்களை ஏமாற்றிய ஒருவரை குருநாகல் குற்றவியல் பிரிவு பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

அளவ்வ மற்றும் வாரிய பொலவைச் சேர்ந்த இரு நபர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து, இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாக குருநாகல் குற்றவியல் பிரிவின்பொறுப்பதிகாரி வில்வலஆரச்சி தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர் நீர்கொழும்பைச் சேர்ந்த ரொஷான் மெண்டிஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் இதேபோன்ற குற்றச்சாட்டுகளின் காரணமாக விளக்கமறியலில் இருந்தபோது தனது நண்பர்களுக்கூடாக இம் மோசடியை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரளை மற்றும் பொதுஹர பகுதியைச் சேர்ந்த இரு பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளையைச் சேர்ந்த கைதான பெண்களில் ஒருவர் போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் காரணமாக கைது செய்யப்பட்டவர் எனவும் அவர் பிரதான சந்தேக நபருடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டதாகவும், விடுதலையானவுடன் பிரதான சந்தேக நபரின் நடவடிக்கைகளுக்கு உதவியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெண்ணின் பெயரில் பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்ததாகவும் அண்மையில் அப் பணம் மீளப்பெறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# 9700 அரசாங்க பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்

(கொழும்பு)

சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 9700 அரசாங்கப் பாடசாலைகளிலும் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கவுள்ளது.

முதலாவது சிறுவர் பாதுகாப்புக் குழு கோட்டே ஆனந்த பாலிகா வித்தியாலயத்தில் அமையவுள்ளது.

சிறுவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு ஒரு ஏற்பாடு தேவை. அது பாடசாலையாக இருப்பதே மிகவும் சிறந்தது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித்தலைவர் நந்த, இந்திரவன்ஷ கூறியுள்ளார்.

சிறுவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன. போதைப்பொருள் பாலியல் துஷ்பிரயோகம், தொந்தரவுக்குள்ளாதல் வீட்டிலுள்ள பிரச்சினைகள்,சிறுவர்களிடையே உண்டாகும் பிரச்சினைகள் பல வகையிலும் காணப்படும் பிரச்சினைகளை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் ஆராய்ந்து தீர்க்க முடியும் என அவர் கூறினார். இந்தக் குழு மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரைக் கொண்டிருக்கும். இவ்வாறாக குழுக்களை தனியார் பாடசாலைகளிலும் அமைக்க முயல்வோம் என நந்த இந்திரவன்ஷ கூறியுள்ளார்.

## பொலிஸாரின் ஏற்பாட்டில் சிறுவர்தின நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பொலிஸ் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை சிறுவர்களுக்கான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

சிறுவர்களைக் கௌரவிக்கும் முகமாக சிறுவர்களுக்கான போட்டிகள் கலை நிகழ்வுகள் என்பன கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (77)

# ஐந்து வருடங்களின் பின் கைதான ஆயுள் தண்டனைக் கைதி

(கொழும்பு)

ஆயுள் தண்டனை பெற்ற நிலையில் ஐந்து வருடங்கள் தலைமறைவாக வாழ்ந்த ஒரு குற்றவாளியை போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜவாஹிர் ஷா ஹனிஸ் அல்லது அனிஸ் எனும் இவர் 3.7கிராம் ஹெரோயினை எடுத்துச் சென்றபோது 1999 ஜனவரி 9 ஆம் திகதி தெஹிவளையில் கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபர் இவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்த நிலையில் 2002 ஜுலை 18 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன்பின் அவர் தலைமறைவானார். அவர் மீதான வழக்கு அவரில்லாமலேயே விசாரிக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதன் பின்னர் அவர் பற்றி தகவலேதும் தெரியவில்லை. இருப்பினும் இவ்வருடம் செப்டெம்பர் 15ஆம் திகதி போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் அவர் வத்தளையில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவர் மீதான வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. குற்றம் சுமத்தப்பட்டவர் வேறு ஒரு வழக்குத் தொடர்பில் பம்பாயில் விளக்கமறியலில் இருந்தபடியால் முந்தைய வழக்கு விசாரணைக்கு வரமுடியில்லை என அவர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கூறினார்.

அவரை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தி இவ் வழக்கு தொடர்பில் புதிய தீர்ப்பு ஒன்றை வழங்குமாறு வழக்குரைஞர் கோரினார்.

ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவர் வேண்டுமென்றே விசாரணைக்கு வராமல் ஒளிந்திருந்தாக அரச தரப்பு வழக்குரைஞர் வாதிட்டார். இந்நிலையில் மேல் நீதி மன்ற நீதிபதி முந்தைய தீர்ப்பை உறுதி செய்து ஆயுள் தண்டனை வழங்கினார்.

## பிள்ளையாரின் கையை உடைத்த திருடர்கள்

(குருநகர்)

பிள்ளையார் சிலையைத் திருடிய திருடர்கள் அது ஐம்பொன்னா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க பிள்ளையாரின் கையை உடைத்துப் பார்த்து விட்டு அது சிமெந்து என்பதை அறிந்ததும் வேலியோரத்தில் போட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு யாழ்.கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள குட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுள்ளது.

கையுடைந்த பிள்ளையார் சிலை மறுநாள் புதன்கிழமை அப்பகுதியிலுள்ள வீடொன்றின் வேலியோரம் கிடக்கக் காணப்பட்டது. பின்பு ஆலய உரிமையாளர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். (68)

## கடன்வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் 30 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவினால் இன்று நடைபெறவிருந்த இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியுயாத காரணத்தால்.

எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளதாக நிஸ்கோ பிரிவின் யாழ்.மாவட்ட பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவச விதைநெல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் 100 வீதம் வெள்ளதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய அமைச்சினால் இவ்வாண்டுக்கான காலபோக நெற்செய்கைக்கு விதைநெல் இலவசமாக விநியோகம் செய்யப்படவுள்ளது. மத்திய விவசாயத்திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் பிரிவினால் இவ் இலவச விதை நெல் வழங்கப்படவுள்ளது.

குறித்த விவசாயிகள் தங்கள் பிரிவு விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு இலவச விதை நெல்லினை பெற்றுக்கொள்ளுமாறு பதில் பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். தொல்புரம் விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள 20 பயனாளிகளுக்கு இன்று தொல்புரம் விவசாய விரிவாக்க நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை உடுவில் விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள 3 பயனாளிகளுக்கு உடுவில் விவசாய விரிவாக்க நிலையத்திலுள்ள நல்லூர் விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள 27 பயனாளிகளுக்கு அரியாலை கிழக்கு விவசாயச் சம்மேளன காரியாலயத்திலும் வழங்கப்படவுள்ளது. (உ)



உலக விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்ற விலங்கு விசர் நோய்த் தின நிகழ்வில் யாழ். பிராந்திய தொற்று நோய் தடுப்பு அதிகாரி சிவகணேசன் விலங்கு விசர் நோயினால் இறந்தவர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தி சுடர் ஏற்றுவதையும் கலைநிகழ்வையும் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த சமூக மட்டத்தில் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வருத்தத்திற்குரியது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினர்களும் பூரண ஒத்துழைப்பு மிக மிக அவசியமானது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தலைமை தாங்கி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மர்மமனிதர்கள், கிறிஸ் மனிதர்கள் எனும் செயற்பாடுகளுக்குப் பின்னர் சில உண்மைகள் சில சக்திகள் இருப்பினும் அது தொடர்பில் வதந்திகளே காணப்படுகிறது.

சில சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களும் இந்த மர்மமனிதன் பிரச்சினை சூழலை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி தங்களது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். பெண்களுக்கு எதிரான மோசமான வன்முறைச் சம்பவங்கள் தெற்கிலும் நிகழ்கின்றன. ஆனால் அவை மர்மமனிதன் கிறிஸ் மனிதனுடன் தொடர்பு படுத்தப் படுவதில்லை, ஆனால் வடக்கில் மட்டும் அவ்வாறு பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற சம்பவங் களை மர்ம மனிதன் கிறஸ் மனித விவகாரத்துடன் தொடர்பு படுத்தி நிலைமையினை மோசமாக்கி மக்களை பதற்றத் திற்குள் வைத்திருக்கும் செயற்பாடுகளை சிலர் முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அத்தோடு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை



ஒழிப்பதற்கும் ஒரு சில தரப்பினர்களின் முயற்சிகள் மட்டும் போதாது அதற்கு சமூகத்தின் அனைத்து தரப்பினர்களும் முயற்சியும் ஒத்துழைப்பும் அவசியமாகும். என அவர் மேலும் தெரிவித்தார்.பிரதேசத்தினதும், மக்களினதும் நலன் மக்கள் அமைப்புக்கள் பொது அமைப்புக்கள் உரிய காலத்தில் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகங்கள் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட வேண்டும். தொடர்ந்து நீண்ட காலமாக ஒரே அமைப்பு இயங்க முடியாது. எனவும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எழிலரசி ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி மானிப்பாய் பிரதேச இணைப்பாளரும் வலிதென்மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான ஜீவா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் கடற்படை அதிகாரிகள் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருட்டை முறியடிக்க இரவு நேர ரோந்துப்பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் திருடர்களின் திருட்டை முறியடிப்பதற்கு அனேகமான இடங்களில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது திடீரென அதிகரித்துக் காணப்படும் இந்தத் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் இரவுப் பொழுதை பீதியுடன் கழித்து வருகின்றனர்.

இந்தத் திருட்டை முறியடிப்பதற்கு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து இரவில் விழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டின் அனேகமான இடங்களில் இந்த விழிப்புக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. (வி)

## சிறுவர் தினப்போட்டி

(நல்லூர்)

நல்லூர்க் கோட்ட பாடசாலைகளுக்கான முதியோர் சிறுவர் தினப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து பாடசாலை போட்டியாளர்களையும் உரிய நேரத்தில் அனுப்பிவைப்பதுடன் தங்கள் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் இருவரையும் அனுப்பி வைக்குமாறு நல்லூர்க் கோட்டகல்விப் பணிப்பாளர் இ. மாணிககராசா அறிவித்துள்ளார். (எஸ்)

## சித்த மருத்துவர்களுக்கும் சமாதான நீதவான் பதவி

(லேவணை)

இலங்கையில் பாரம்பரிய சித்த வைத்தியத்தினை மேற்கொண்டு வருகின்ற வைத்தியர்களுக்கு சமாதான நீதவான் பதவிகளை வழங்கு வதற்கானநடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென சித்தி வைத்தியர்களால் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

யாழ். கைதடி சித்த ஆயுர்வேத போதனாவைத்தியசாலையில் இடம்பெற்ற பாரம்பரிய சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கும், சோதிடர்களுக்கிடையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்த சுதேச வைத்திய அமைச்சின் திட்டப்பணிப்பாளரும் உதவி ஆணையாளருமான உப்புள் வீரபத்திரானவிடம் சித்த வைத்தியர்கள் ஒன்றிணைந்து இந்தக் கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

மேற்படி கோரிக்கைகளைக் கேட்ட உப்புள் வீரபத்திரான இந்த வேண்டுகோளினை தான் நீதி அமைச்சுடன் கதைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார். (05)

## தனிமனித ஆளுமை அபிவிருத்தி இருநாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபையின் வாசிப்பு மாததத்தைமுன்னிட்டு பிரதேச சபையின் கோண்டாவில் நூலகத்தினால் நடத்தப்படும் தனிமனித ஆளுமை அபிவிருத்திக்கான வேலைத்திட்ட இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை நாளையும் நாளை மறுதினமும் கோண்டாவில் மேற்கு வேதபராயண சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் மேரி ஜோசெப் சாந்தசீலன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் எஸ்.மணிமாறன் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

தொடர்பாடல்திறன் பேரம் பேசுதல் வாழ்விலும் தொழிலிலும் படைப்புத்திறன் எதிர் காலத்தை திட்டமிடல் குழுவாகத் தொழிற்படல் தலைமைத்துவம் புதிய கோணத்தில் என்னும் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் பயிற்சிகள் இடம் பெறவுள்ளன. (உ)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் சமூகக்கல்வி பாடத்திற்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு1 அல்லது 2-1 இனைச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்ட யாழ். வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதில் குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டுபட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும் கல்விமாணிப் பட்டதாரிகளுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் தகைமையி லிருந்து விலக்களிக்கப்படும் அல்லது.

விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசியக் கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத்திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்குக் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத் தல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சித் துறையும் பட்டமும் அக்குறிப்பிட்ட பாடத்தைச் சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் டிப்ளோமாச் சான்றிதழ்தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று முப்பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னராக அனுப்பி வைக்கப்படும் விண்ணப் பங்கள் ஏற்றுக் கொண்ணப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வை யிடலாம். என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடகவள பயிற்சி நிலையத்தினால் கடந்த இரு வாரங்களாக நடத்தப்பட்டு வரும் புலனாய்வும் அரசியலும் என்னும் குறுங் கால பயிற்சி நெறியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று நண் பகல் 12.00 மணிக்கு யாழ். பல் கலைக்கழக ஊடக வள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக ஊடக வள பயிற்சி நிலையப் பணிப்பாளர் எஸ்.தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பயிற்சி நெறியில் பங்கேற்ற பகல்நேர மாணவர்கள் முப்பத்தைந்து பேரும் மாலைநேர மாணவர்கள் ஊடகத்துறை சார்ந்தோர் மற்றும் ஆர்வலர்கள் 40 பேரும் இநதச் சான்றி தழைப்பெறவுள்ளார்கள்.இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# விலங்கு விசர்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பணியாளர்களின் செயற்பாடு அவசியம்

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விலங்குவிசர் நோய் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் இது இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து முன்னணியில் திகழ்வதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக விலங்கு விசர்நோய் தினத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலை யத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விலங்கு விசர் நோய்தின நிகழ்வில் தலைமை ஏற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணியாளர்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டின் மூலமாகவே இந்நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடியதாக உள்ளதாகவும், குறிப்பாக எமது பகுதியின் விலங்கு விசர் நோய்த்தடுப்பு அதிகாரி கே.வர்ணநாதனின் பணி பாராட்டுக்குரியது எனவும் தெரிவித்தார்.

இனிவருங் காலங்களிலும் எமது பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணியாளர்கள் தீவிரமாகச் செயற்பட்டு இந்நோயின் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்தும் இந்நிலையைப் பேணுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நோய் ஏற்பட்ட ஒருவருக்கு மரணம் நிச்சயம். இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் தான் இலங்கை அரசாங்கமும் இதனைப் பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கையில் சராசரியாக ஆண்டொன்றிற்கு இந்நோயின் காரணமாக 50 வரையானவர்கள் இறக்கின்றனர். இவற்றில் 10 வீதம் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் 2005 ஆம் ஆண்டுகாலப் பகுதியிலிருந்து விலங்கு விசர்நோயின் காரணமாக இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது. (பா)



மானிப்பாய் பரிஸ் லியோ கழகம், மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இலவச கண் மருத்துவ முகாம் ஒன்றினை பண்டத்தரிப்பு பட்டின நூல் நிலையத்தில் நடாத்தி இலவசமாக மூக்கு கண்ணாடிகளை வழங்கியது. லியோ கழக ஆலோசகர், பேராசிரியர் லயன் சாந்தன், பயனாளி ஒருவருக்கு மூக்கு கண்ணாடி அணிவிப்பதைக் காணலாம். (54)

# போதனா வைத்தியசாலையில் ஊடகவியலாளர்களுக்கு கட்டுப்பாடு

(குருநகர்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துள் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதோ புகைப்படங்கள் எடுப்பதோ பணிப்பாளரால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பகல் வேளைகளில் வைத்தியசாலைப் பணிப்பாளரதும் இரவு நேரங்களில் பணியிலுள்ள வைத்தியப் பொறுப்பதியாரியிடமும் எழுத்து மூலமான முன் அனுமதி பெற்றுக் கொண்டே ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பதையும், புகைப்படங்கள் எடுப்பதையும் கைக்கொளள வேண்டுமென்ற அறிவுறுத்தல் வெளிநோயாளர் நுழைவாயிலில் உள்ள பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்ற அறைக் கணணாடியில் ஒட்டப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆரம்பமான காலந்தொட்டு சுதந்திரமான ஊடக நடைமுறை இருந்தது. புதிய வைத்தியசாலை நிர்வாகமே இந்நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நாடு அனர்த்தங்களிலிருந்து மீண்டு, முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்கின்ற இக் காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வருகை தருகின்ற யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான வைத்தியசாலை யில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது அநாகரீகமான செயலென ஊடக வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. (68)

# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணைக்கும் மண்டைதீவுச் சந்திக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை இடம் பெற்ற பயணிகள் பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் சிகிச்சை பயனின்றி ஐந்து நாட்களின் பின்னர் நேற்று அதிகாலை மரண மடைந்துள்ளார். மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கே.கிருஸ்ணரூபன் (வயது 22) என்ற இளைஞரே சிகிச்சை பலனின்றி மரண மானவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்த இவருடன் விபத்தில் சிக்கிய மற்றுமொரு இளைஞன் ஒருகால் முறிந்த நிலையில் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (பா)

# வீதியில் குவிக்கப்பட்டுள்ள கற்களால் அவலத்திற்குள்ளாகும் பிரயாணிகள்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் இறங்குதுறை அமைபதற்காக போடப்பட்ட பாரிய கறகள் போக்குவரத்திற்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கற்கள் வீதியோரத்தில் குவிக்கப்பட்டுள்ளதால் அவற்றினால் வீதியால் செல்லும் வாகனங்கள் சிரமப்பட்டு வருகின்றன.

இறங்குதுறை கட்டுமானப் பணிகளுக்காக வீதியோரத்தில் குவிக்கப்பட்டிருக்கும் இந்தக் கற்கள் கடந்த ஆறு மாதகாலமாக தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்தொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சினால் அமைக்கப்பட இருக்கும் இந்த இறங்கு துறைக்கான கட்டுமானப் பணிகளுக்கு எற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிதி ஒதுக்கப்பட்டும் கட்டுமானப் பணிகள் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை. (வி)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.09.2011 - வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
புரட்டாதி 13 ஆம் நாள்.
ராகுகாலம் 10.32-12.02, சுபநேரம் 6.02 -7.32,
நட்சத்திரம்: சுவாதி பி.ப 1.25 வரை
திதி: திருதியை மு.ப 10.27 வரை
சதுர்த்தி விரத நன்னாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பணமுடை, குடும்பத்தில் கவலை, நண்பர் உதவி, தேக சுகம் பாதிப்பு, மருத்துவச் செலவு.

ரிஷபம:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, சுற்றத்தார் ஆதரவு, மனதில் சந்தோஷம், தேக சுகம்.

மிதுனம் :- பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், சகோதரர் பகை, தேக சுகக்குறைவு.

கடகம்:- குடும்பத்தில் குதூகலம், பணவரவு, மனச் சந்தோஷம், நண்பர் வருகை, தேக ஆரோக்கியம்.

சிம்மம்:-பணமுடை, மனச்சஞ்சலம், குடும்பத்தில் கவலை, தீயோர் சேர்க்கை, உடல் நலம் பாதிப்பு.

கனனி :- குடும்பத்தில் குழப்பம், பணவரவு, மனதில் வெறுப்பு, நண்பர் வருகை, உடல் உபாதை.

துலாம் :- பணவரவு, குடும்பத்தில் அமைதி, சகோதர பாசம், வெளிநாட்டு உதவி, தூரத்திலிருந்து நற்செய்தி.

விருச்சிகம்:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, மனதில் சந்தோஷம், தெய்வ தரிசனம், கடன் வசூல்.

தனுசு:- பணவரவு, குடும்பத்தில் குதூகலம், வெளிநாட்டு உதவி, மனதில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம்.

மகரம:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணமுடை, தெய்வதரிசனம், நண்பர்உதவி, தேக சுகம் பாதிப்பு.

கும்பம் :- பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், நண்பர் வருகை, உள்ளக் குமறல்

மனம்:- பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனதில் சந்தோஷம், உடல் நலம் பாதிப்பு, கடவுள் வழிபாடு.

# தங்கத்தின் விலை 11 ஆயிரம் ரூபா வீழ்ச்சி

(குருநகர்)

தங்கப் பவுணின் விலையில் திடீரெனப் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சடுதியாக கூடிக்கொண்டிருந்த தங்கத்தின் விலை இலங்கையில் 55 ஆயிரம் ரூபாவாக விற்றுக் கொண்டிருக்கையில் 11 ஆயிரம் ரூபா வரை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

உலக சந்தையில் தங்கத்திற்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சியைத் தொடர்ந்தே இலங்கையிலும் அதன் விலை சரிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கத்தின் விலையில் ஏற்பட்டுள்ள இந்த விலை வீழ்ச்சியை அடுத்து அடைவு நகைகளுக்கு போட்டி போட்டுப் பெருந்தொகை பணத்தை வழங்கிய வங்கி வட்டாரங்கள் திகைப்பில் ஆழ்ந்துள்ளதாக அறியப்படுகிறது. (68)

# சித்தமருத்துவர்களுக்கான பயிற்சிப்பட்டறைக் கருத்தரங்கு

(வேலணை)

வடமாகாண சுதேச மருத்துவ சபையினரின் ஏற்பாட்டில் பாரம்பரிய சித்த ஆயுர்வேத வைத்தியர், மற்றும் சோதிடர்களுக்கிடையிலான மேலதிக பயிற்சிப்பட்டறையும் கருத்தரங்கு ஒன்றும் எதிர்வரும் 27ஆம் 28ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. இந்தப் பயிற்சிப்பட்டறைக் கருத்தரங்கில் "குழந்தைகள்" மருத்துவத்தில் சோதிடம், மந்திரம் ஆகியவற்றின் பங்களிப்பு என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் பாரம்பரிய வைத்தியர்களும் சோதிடர்களுடன் சுதேச மருத்துவக் கல்லூரியினது மாணவர்களின் பங்களிப்புக்களும் முக்கியமாக இடம்பெறவுள்ளது. (05)

# புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நிக்கொட் நிறுவன நிதி உதவியுடன் பாடசாலையின் பெண்கள் விடுதி மற்றும் வகுப்பறைக்கான வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு பாடசாலை அதிபர் திரு.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) வகுப்பறைகள் புனரமைப்பதற்கான வேலைத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மாநகரசபை உறுப்பினர் விஜயகாந் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்க ராஜா உட்பட ஆசிரியர்கள் மாணவர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ)

# மர்ம மனிதர்களின் நடமாட்டம் நேரத்துடன் முடியும் ஆலய பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு ஆலயங்களில் நவராத்திரி பூஜை வழிபாடுகளை இரவு வேளைக்கு முன்பாகவே நடாத்தி முடிப்பதற்கு அநேகமான ஆலய நிர்வாகங்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

திருட்டுச் சம்பவங்கள் மற்றும் மர்ம நபர்களின் நடமாட்டம் போன்றவற்றால் குடாநாட்டு மக்கள் மாலையுடனேயே வீடுகளில் முடங்குகின்றனர்.

இந்த நிலையில் மக்கள் இரவில் நடைபெறும் நவராத்திரி பூஜை நிகழ்வுகளில் கலந்துகொள்ளவும் பீதியுற்றுக் காணப்படுகின்றனர்.

இவ்வாறு நவராத்திரி பூஜை நிகழ் வுகளை மாலை 7 மணிக்கு முன்பாகவே நடாத்தி முடிப்பதற்கு அநேகமான ஆலயங்கள் தீர்மானித்துள்ளன. (வி)

# கே.சீ.சீ. வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் அரையிறுதிக்கு முன்னணி அணிகள் தகுதி



அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்துத் தொடரில் சம்பியனான காமாட்சி அணிக்கு, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதைக் காணலாம். இப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியை வீழ்த்தியே கொக்குவில் காமாட்சி அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

((யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு யாழ். பல்கலைக் கழகம், ஸ்கந்தாஸ்ரார், ஜொலிஸ்ரார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கொக்குவில் கே.சீ.சீ.சீ. விளையாட்டுக் கழகம் இரண்டாவது ஆண்டாக நடத்தும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரீஸ் அணி 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிதர்ஸன் 67, ஜெயதீபன் 18, வினோத் 64 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனார்த்தனன், நிசாந்தன், கிரிசாந்தன், விதுரன், தசரீதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். பல்கலைக் கழக அணி, 29.3 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் லவன் 24, அரணவன் 31, செல்ரன் ஆட்டமிழக்காது 99 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோத் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் யாழ். பல்கலைக்கழக அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாவது காலிறுதிப் போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணியும், ஈகிள்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஸன் 17, சண்ஜெயன் 29, நிஷாகரன் 43, ஜனாக்ஸன் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமாசுதன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய ஈகிள்ஸ் அணி 24.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விஸ்வரூபன் 18, முல்லைத்தீவியன் 36, நிருஷான் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன், சன்ஜெயன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் ஸ்கந்தாஸ்ரார் அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற நான்காவது காலிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும், சிறிகாமாட்சி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி 30 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சைலேஸ் ஆட்டமிழக்காது 129 ஓட்டங்களைப் பெற்றார். 2011ஆம் ஆண்டு கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ணத் தொடரில் முதல் சதம் பெற்ற வீரர் என்ற சிறப்பையும் சைலேஸ் பெற்றுக் கொண்டார். மற்றும் மணிவண் ணன் 72, ஜனார்த்தனன் 31, கார்த்திக் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய சிறிகாமாட்சி அணி 178 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ஜெயராஜ் 34, றதீஸன் 27, பவிதன் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வாமணன் மூன்று, தீபன், சன்ஜித் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, ஏற்கனவே நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் கே.சீ.சீ.சீ. அணி யாழ். சென்றல் அணியை வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(07)

# கோட்ட மட்ட சம்பியனானது வயாவிளான் மத்திய ம.வி

((யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக் கோட்ட மட்ட 13 வயது கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்துத் தொடரில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாகியது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும், கட்டுவன் புலம் மகாவித்தியாலய அணியும் மோதின.

போட்டியின் இறுதி வரை இரு அணிகளுமே ஒவ்வொரு கோலைப் போட்டமையால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 2-1 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணியும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியும் மோதின.

இதில் ஆட்டத்தின் இறுதி வரை இரு அணிகளுமே கோல் எதனையும் போடாதமையால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 4-2 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வயாவியான் மத்திய மகா வித்தியாலய அணி வீரர்களின் சிறப்பான ஆட்டத் திறனை எதிர்கொள்ள அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி திணறியது.

இறுதியில் 5-0 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெற்றி பெற்று தெல்லிப்பளைக் கோட்ட சம்பியனாகத் தெரிவானது.

இறுதிப் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட தனோஜன் 2, மதுசன், அனுசன், பிரதீப் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் போட்டு வயாவிளான் அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினர்.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் மகாஜனா கல்லூரி அணியை எதிர்கொண்ட கட்டுவன்புலவு வித்தியால அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

# மோகனதாஸ் அணி சம்பியன்



((யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான தொடரில் மட்டுவில் மோகனதாஸ் அணி சம்பியனானது.

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட இக்கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 25ஆம் திகதி மின்னொளியில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நிறைவடைந்தது.

இதன் இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், கச்சாய் சிறிமுருகன் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 3-0 என்ற நேர் செட் கணக்கில் மட்டுவில் மோகனதாஸ் அணி வெற்றியீட்டி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மட்டுவில் மோனகதாஸ் அணி வீரர் சி. பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார்.

மின்னொளியில் இப்போட்டித் தொடர் நடைபெற்றமையால் ஏராளமான ரசிகர்கள் வருகை தந்து போட்டியை ரசித்ததுடன், இரு அணிகளுக்கும் உற்சாகமூட்டியமை குறிப்பிடத்தக்கது.

(எப்.எஸ்)

# யங்கமன்ஸ் கால்பந்துத் தொடர் காலிறுதியில் ஆதிசக்தி, கலைமதி

(நெல்லியடி)

யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்துத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஆதிசக்தி மற்றும் கலைமதி அணிகள் தகுதிபெற்றுள்ளன. பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும், தினமுரசு ஊடக அனுசரணையுடனும் நடத்தப்பட்டு வரும் இக்கால்பந்து தொடர் யங்கமன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் ஆதிசக்தி அணி பெம்பஸ் அணியை எதிர்கொண்டது. ஆதிசக்தி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதில் அருள், குகன் ஆகியோர் சிறப்பான கோலைப் பெற்றுக் கொடுத்து ஆதிசக்தி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கலைமதி அணியும், பருத்தித்துறை ஐக்கிய அணியும் மோதின. இதில் கலைமதி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

(12)

# தேசிய மட்ட பாடசாலைகள் தடகளம் தியகமவில் இன்று ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி இன்று முதல் ஆரம்பமாகின்றது.

தியகமவில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இன்று வெகு சிறப்பாக ஆரம்பமாகின்றது.

இதில் வடக்கு மாகாணம் சார்பாக அதிகமான வீர, வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

158 வீரர்களும், 150 வீராங்கனைகளும் இம்முறை வடக்கு மாகாணம் சார்பாக பங்குபற்றவுள்ளதாகவும், இதில் சாதிக்கும் ஆற்றல் கொண்ட வீர, வீராங்கனைகள் இவற்றில் அதிகளவில் இருப்பதால் வடக்கு மாகாணம் குறிப்பிட்டத்தக்க அளவில் பதக்கங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இன்று தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடருக்கான ஏற்பாடுகள் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், உணவு மற்றும் மருத்துவ சேவைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக ஹொக்கி தொடர் கிண்ணம் வென்றது கிறாஸ்கொப்பர்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்ட ஹொக்கிப் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை கிறாஸ்கொப்பர்ஸ் கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட ஹொக்கித் தொடரில் ஹட்ரிக் கிண்ணத்தை பெற்ற அணி என்ற சிறப்பையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி பெற்றுக் கொண்டது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்ட ஹொக்கித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், கிறாஸ்கொப்பர்ஸ் அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முற்பாதி ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் கிறாஸ்கோப்பர்ஸ் வீரர் தருசன் ஒரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 20ஆவது நிமிடத்திலும் கிறாஸ்கொப்பர்ஸ் வீரர் கிறேசியனினால் மேலும் ஒரு கோல் போட முற்பாதி ஆட்டத்தில் 2-0 என்ற கோல் கணக்கில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி முன்னிலை வகித்தது.




பின்னடைவை சற்று சீர்செய்து பிற்பாதி ஆட்டத்தில் வீறுகொண்ட யாழ். பல்கலைக்கழக அணி 5ஆவது நிமிடத்தில் கோபிநாத்தால் ஒரு கோலை போட்டது. இதன் காரணமாக பல்கலைக்கழக அணி மேலும் உற்சாகமடைந்து விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இருந்தபோதிலும் கிறாஸ்கொப்பர் வீரர் நிலோஜன் அதிரடியாக 11, மற்றும் 15ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். மீண்டும் 20ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக வீரர் பாலுவால் மேலும் ஒரு கோல் போடப்பட்டது.

இதன் பின்னர் இரு அணிகளுமே கோல் போட முற்பட்டபோதிலும் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இறுதியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயனாக கிறாஸ்கொப்பர்ஸ் வீரர் நிலோஜனும், தொடர் நாயகனாக பல்கலைக்கழக வீரர் பாலுவும் தெரிவானார்கள்.

இதேவேளை, கடந்த 2010ஆம் ஆண்டு பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட ஒன்பது பேர் கொண்ட ஹொக்கித் தொடரிலும், அதே ஆண்டு பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட 11 பேர் கொண்ட ஹொக்கித் தொடரிலும் சம்பியன் பட்டத்தை வென்றிருந்த கிறாஸ்கொப்பர்ஸ் அணி நேற்றைய தினம் நிறைவடைந்த மேற்படி ஹொக்கித் தொடரிலும் கிண்ணத்தை வென்று தொடர்ச்சியாக மூன்று தடவைகள் கிண்ணத்தை வென்ற அணி என்ற சிறப்பையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12, எஸ்.எப்)

## வோஸ்னியாக்கி அதிர்ச்சித்தோல்வி



(டோக்கியோ)


பான் பசிபிக் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் முதல் நிலை வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) அதிர்ச்சித் தோல்வியடைந்தார். மூன்றாவது சுற்றில் க்ாயா கானெபியுடன் (எஸ்டோனியா) நேற்று முன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 5-7, 6-1, 4-6 என்ற செட் கணக்கில் போராடி தோறறார். இந்த வெற்றியின் மூலம் கானெபி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு 3ஆவது சுற்று ஆட்டத்தில் நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 7-6 (7-4), 7-6 (7-4) என்ற செட் கணக்கில் கடுமையாகப் போராடி ஜெர்மனியின் ஜூலியா ஜார்ஜஸை வீழ்த்தினார்.

மரியா கிரிலென்கோ (ரஷ்யா) 6-3, 6-1 என்ற நேர் செட்களில் அனா இவானோவிச்சை (செர்பியா) வென்றார். வேரா ஸ்வோனரேவா (ரஷ்யா), பெட்ரா குவிட்டோவா (செக்.), மரியோன் பர்டோலி (பிரான்ஸ்), விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**தென்னாபிரிக்கச் சுற்றுப் பயணம்**

## அறிவிக்கப்பட்டது அவுஸ்ரேலிய அணி



(சிட்னி)

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து ருவென்ரி 20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ள அவுஸ ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ருவென்ரி 20 தொடருக்கான (2 போட்டி) அணியில் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜான்சன் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். ஒருநாள் தொடருக்கான அணியில் (3 போட்டி) டேவிட் ஹஸி தேர்வு செய்யப்படவில்லை.

முதல் ருவென்ரி 20 கேப்டவுனில் ஒக். 13ஆம் திகதியும், 2ஆவது ருவென்ரி 20 ஒக்.16இல் ஜோகனஸ்பர்கிலும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் அணி: மைக்கேல் கிளார்க் (கப்டன்), ஷேன் வட்சன், டேவிட் வோர்னர், ஷோன் மார்ஷ், ரிக்கி பொன்டிங், மைக்கேல் ஹஸி, பிரொட் ஹடின் (விக்கெட் கீப்பர்), ஸ்டீவன் ஸ்மித், மிட்செல் ஜான்சன், பிரெட் லீ, சேவியர் டோஹர்டி, ஜேம்ஸ் பேட்டின்சன், பேட்ரிக் கம்மின்ஸ், டக் பொலிஞ்சர்.

ருவென்ரி 20 அணி: கமரான் வையிட் (கப்டன்), ஷேன் வட்சன், டேவிட் வோர்னர், ஷோன் மார்ஷ், மிட்செல் மார்ஷ், ஆரோன் பிஞ்ச், டேவிட் ஹஸி, மேத்யூ வேட் (விக்கெட் கீப்பர்), ஸ்டீவன் ஸ்மித், ஸ்டீவ் ஓ கீப், பிரெட் லீ, ஜேம்ஸ் பேட்டின்சன், பேட்ரிக் கம்மின்ஸ், டக் பொலிஞ்சர்.

இதேவேளை, டெஸ்ட் தொடருக்கான அணி பின்னரே அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபலப்படுத்தத் தயார்

இந்தியாவில் கால்பந்து விளையாட்டை பிரபலப்படுத்த ஆர்வமாக உள்ளதாக இந்திய ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் தெரிவித்துள்ளார். இந்தியாவில் கால்பந்து விளையாட்டை பிரபலப்படுத்த அதன் தூதராக செயற்பட விரும்புகிறேன். கால்பந்து விளையாட்டு என்னுடைய ரத்தத்தில் உள்ளது. இந்த விளையாட்டில் பங்கேற்கும் வகையில் இளைஞர்களை ஊக்கப்படுத்த விரும்புகிறேன். அதனால் இந்திய கால்பந்து சங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

## இந்திய அணி அறிவிப்பு சிரேஷ்ட வீரர்கள் அவுட்

(சென்னை)

இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரின் முதல் இரு போட்டிகளுக்கான இந்திய அணி விபரம் நேற்று வியாழக்கிமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வணியில் சிரேஷ்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், யுவராஜ்சிங், வீரேந்தர் சேவாக், ஆகியோர் இடம்பெறவில்லை. இவர்கள் காயங்களிலிருந்து முற்றாக குணமடையாமையே இதற்கான காரணமாகும். இதேபோன்று வேகப்பந்துவீச்சாளர்களான சகீர்கான், இஷாந்த் சர்மா, முனாப் பட்டேல் ஆகியோர் காயம் காரணமாக இந்திய அணியில் இடம்பெறவில்லை. சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன்சிங்கும் வேகப்பந்துவீச்சாளர் ஆஷிஸ் நெஹ்ரா ஆகியோரும் அணியில் இடம்பெறத் தவறியுள்ளனர்.

இத்தொடரின் முதல் இரு போட்டிகளுக்கான இந்திய அணி விபரம்: எம்.எஸ்.டோனி (தலைவர், விக்கெட் காப்பாளர்), கௌதம் கம்பீர, பார்த்தீவ் பட்டேல், அஜின்க்யா ரஹானே, ஹோலி, சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, ஆர்.அஸ்வின், வருன் ஆரோன், உமேஷ் யாதவ், வினய் குமார், எஸ். அரவிந்த், ராகுல் சர்மா, மனோஜ் திவாரி, பிரவீன் குமார்.

## ஒலிம்பிக்கில் பங்குபற்றும் நாடுகளின் தேசிய கீதத்தை பதியும் பணிகள் நிறைவு




(லண்டன்)

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள நாடுகளின் தேசிய கீதத்தை பதிவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆங்கில அகரவரிசையின் பிரகாரம் தேசிய கீதத்தை பதிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

205 நாடுகளின் தேசிய கீதம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மே மாதம் முதல் இந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அடுத்த வருடம் லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

இதேவேளை, லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள இங்கிலாந்தின் லண்டன் நகரில் ஏற்பாட்டு நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களின் நிர்மாணப் பணிகள் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## தெரிவு செய்யப்பட்டது சமனிலையான அணியே

### தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த்

(சென்னை)

இங்கிலாந்துக்கு எதிராக தேர்வு செய்யப்பட்ட இந்திய அணி சமநிலையான அணி. காயங்களின் தாக்கம் இல்லாத அணி. இதனால் இந்த அணி நன்றாக விளையாடும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. இவ்வாறு அணித் தேர்வுக் குழுத் தலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

முதல் 2 ஒருநாள் போட்டிகளுக்கான அணியே இது. டில்லி ஒருநாள் போட்டிக்கு பின்னர் அடுத்த போட்டிகளுக்கான அணி தேர்வு செய்யப்படவுள்ளது. அணிக்கு இரண்டு பெரிய தொடர்கள் உள்ளன, முதலில் மேற்கிந்தியதீவுகள் வருகிறது அதற்கடுத்து அணி அவுஸ்ரேலியா செல்கிறது. நாங்கள் அணித் தேர்வில் தரத்தின் மீது சமரசம் கொள்ளவில்லை. புத்துயிர்ப்பு பெற்ற அணி இது, டோனியே எதிர்காலத்தில் சிறப்பாக செயற்படுவதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார். மூத்த வீரர்கள் காயமடைந்துள்ளதால் புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பளித்துள்ளோம். இளம் வீரர்கள் அணியில் உற்சாகங்களை கொண்டு வருவார்கள் எனவும் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையுடன் பேசவில்லை

## மாலைதீவு உதவி ஜனாதிபதி

(கொழும்பு)

நியூயோர்க்கில் மகிந்த ராஜபக்ஷவுடன் இலங்கையின் மனிதஉரிமை நிலைமைகள் குறித்து மாலைதீவு உதவி ஜனாதிபதி மொகமட் வாகிட் ஹசன் கலந்துரையாடியதாக இலங்கை அரசாங்கம் வெளியிட்ட தகவலை மாலைதீவு உதவி அதிபரின் செயலகம் நிராகரித்துள்ளது.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற போது ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவை மாலைதீவு உதவி அதிபர் சந்தித்துப் பேசியதாகவும், ஆனால் மனிதஉரிமை நிலைமைகள் குறித்து அதன்போது பேசப்படவில்லை என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மனிதஉரிமை நிலைமைகள் குறித்த இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதாக மாலைதீவு உதவிஅதிபர், வாக்குறுதி அளித்ததாக ஹவீரு என்ற ஊடகத்துக்கு அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

ஆனால் இதுதொடர்பாக விளக்கமளித்துள்ள மாலைதீவு உதவி அதிபரின் செயலகம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்ததாகவும், அதில் வர்த்தக உறவுகள் தொடர்பாகவும் ஐ.நாவில் வடக்கு, தெற்கு நாடுகளின் ஒத்துழைப்புப் பற்றியுமே பேசப்பட்டதாகவும் கூறியுள்ளது.

இந்தச் சந்திப்பில் மனிதஉரிமைகள் விவகாரம் குறித்து எதுவுமே பேசப்படவில்லை. என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஜெனிவாவில் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை அரசைக் காப்பாற்றும் முயற்சியில் பரப்புரைகளில் மாலைதீவு அதிபர் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொலைக்களத்தை ஒளிபரப்ப வேண்டாம்; நோர்வே தொலைக்காட்சிக்கு தூதுவர் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படத்தை ஒளிபரப்ப நோர்வேயின் என்.ஆர்.கே தொலைக்காட்சி முடிவு செய்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதுவர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த ஆவணப்படம் முற்றிலும பக்கச் சார்பானது என்றும், இதில் இலங்கை மீது ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் றொட்னி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், இத்தகைய ஆவணப்படத்தை ஒளிபரப்புவது அதனைக் குழப்பத்துக்கு உள்ளாக்கும் என்றும் அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

இதுபோன்ற காட்சிகள் அடங்கிய காணொளியை ஒளிபரப்புவதன் மூலம் ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகம் மட்டுமன்றி அதன் பணியாளர்களுக்கும் நோர்வேயில் வசிக்கும் இலங்கையர்கள் அனைவருக்குமே பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதேவேளை, சனல் 4 தயாரித்த இந்த ஆவணப்படத்துக்குப் போட்டியாக இலங்கை பாதுகாப்பு அமைச்சுத் தயாரித்த ஆவணப்படத்தை ஒளிபரப்புவது குறித்து கவனம் செலுத்துமாறும் என்.ஆர்.கே தொலைக்காட்சியிடம் இலங்கைத் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# போர்க்குற்றச்சாட்டு போராட்டத்திற்கு இன்றையதினம் முடிவு கிடைத்துவிடும்

(கொழும்பு)

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக எவ்வகையான தீர்மானங்களை முன்வைத்தாலும் அதனை முறியடிப்போம். போர்க் குற்றச்சாட்டுக்களை மையப்படுத்தி இலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் இடையில் நடைபெறுகின்ற போராட்டத்திற்கு ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இன்று பதில் கிடைத்துவிடும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக நேற்று முன்தினம் மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்: இடம்பெயர்ந்த தமிழர்களும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினரும், மேற்குலக நாட்டவருமே இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர்.

இவர்கள் மிகத் தீவிரமாக இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்ற போதிலும் அதனை பெரும்பாலான நாடுகளின் ஆதரவுகளைப் பெற்று முறியடிக்க தேவையான பொறிமுறையைக் கையாண்டுள்ளோம்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டுவர சர்வதேச மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கனடா மற்றும் மேற்குலக நாடுகள் உட்பட அரசசார்பற்ற நிறுவனங்கள் சர்வதேசத்தில் வாழும் புலி ஆதரவாளர்கள் என்று பல்சார் கூட்டணி இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஆதாரங்களை தயாத்து வருகின்றது.

இவர்களின் இலங்கைக்கு எதிரான பிரதான ஆதாரமாக ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை கையாளப்பட்டு வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை 30ஆம் திகதியே இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்திற்கும் இறுதி நாளாகும். ஏனென்றால் மனித உமைப் பேரவையில் தோல்வியடைந்த எந்தவொரு தீர்மானத்தையும் பாதுகாப்புச் சபைக்கோ,பொதுச்சபைக்கோ கொண்டு செல்ல முடியாது.

இலங்கைக்கு ஆதரவாக ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் ஏராளமான நாடுகள் உள்ளன. எனவே குறிப்பி[illegible] சிலரின் செயற்பாடுகள் இலங்கைக்கு சவாலாக அமையாது. எவ்வாறாயினும் நாட்டிற்கு எதிராக முன் வைக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களையும் நாம் முறியடிப்போம் என்றார்.

## காலம் கடந்த விசாக்களுடன் தங்கியுள்ளோரை கைதுசெய்ய ஏற்பாடு


(கொழும்பு)

காலங்கடந்த விசாக்களுடன் இலங்கையில் தங்கியிருப்போரை கண்டுபிடிப்பதற்கு விசேட பிரிவொன்று நியமிக்கப்பட உள்ளது. இலங்கையில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள விசாக் காலத்தைத் தாண்டி தொடர்ந்தும் தங்கியிருக்கும் வெளிநாட்டு பிரஜைகளை கைது செய்யும் நோக்கில் இந்தப் பிரிவு நியமிக்கப்பட உள்ளது.

இலங்கைக் குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தினால் இந்த விசேட பிரிவு உருவாக்கப்பட உள்ளது.

சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்துள்ளார். வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கக் கூடிய இடங்களில் விசேட சோதனையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# திறமையற்ற நகரசபை இருக்குமானால் நாடு அபிவிருத்தியடைந்தும் பயனில்லை



(கொழும்பு)

திறமையற்ற நகரசபையொன்று செயற்படுமாயின் நாடு எந்தளவிற்கு அபிவிருத்தியடைந்தாலும் மக்களுக்கு எந்தவொரு அனுகூலமும் இல்லை. என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒல்கட் பாடசாலைகள் மற்றும் கோட்ன பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு, கோட்ன, தெஹிவளை, கல்கிசை மற்றும் கொலன்னாவ நகர சபைகளின் பொருட்டு எதிர்வரும் வருடத்தில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினர் ஆர் துமிந்த சில்வா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## போதைப் பொருளை இலங்கைக்கு கடத்திய இருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருட்களை கடத்த முயற்சித்த இருவரை தமிழ்நாடு கியூ பிரிவு காவற்துறையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.கஞ்சா மற்றும் புகையிலைத் தயாரிப்பு போதைப் பொருட்களை, குறித்த சந்தேகநபர்கள் இலங்கைக்கு கடத்த முயற்சித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த மீன்பிடிப் படகு ஒன்றை தமிழ் நாடு கியூ பிரிவு காவல்துறையினர் நேற்றுமுன்தினம் சோதனை செய்த போது அதிலிருந்து இரண்டு கஞ்சா பைகள் மற்றும் புகையிலைத் தயாரிப்பு போதைப் பொருள் 8 கிலோக் கிராம் என்பன மீட்கப்பட்டுள்ளன. குறித்த மீன்பிடிப் படகையும் போதைப் பொருள் கடத்திவர பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றையும் கியூ பிரிவு காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

# அமெரிக்க தூதுவரிடம் விளக்கம் கேட்கிறார் அங்கிலிக்கன் பேராயர்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் அமெரிக்கா வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்துக்கள் விக்கிலீக்ஸில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அந்த தகவல்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் தமது கருத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அங்கிலிக்கன் பேராயர் துலிப் டி சிக்கேரா வலியுறுத்தியுள்ளார்.

இதன் மூலம் அமெரிக்க அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகளை மேம்படுத்த முடியும். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி பேராயர் துலிப் சிக்கேராவின் கருத்தை அமெரிக்கத் தூதுவர் பெற்றிசீயா பியூட்டினியஸ், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளார். அதில் துலிப் சிக்கேரா, உலக நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாக தமது தனிப்பட்ட அனுபவங்கள் குறித்து வெளிப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. காலணித்துவ நாடாக இருந்த இலங்கையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.தென்னாபிரிக்காவின் பிரச்சினை, அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் அவுஸ்ரேலியாவின் ஆதிவாசிகளின் உரிமைகள் போன்ற விடயங்களை இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். என்று சிக்கேரா குறிப்பிட்டுள்ளார்.

சரியோ, பிழையோ மஹிந்த ராஜபக்ஷ சிங்களவர்களின் விருப்பின் பேரில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும் அவர் வடக்கை பற்றியும் கருத்திற்கொள்ள வேண்டும்.

இந்தநிலையில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பில் சிங்களவர்களின் பார்வையில் முன்னேற்றம் உள்ளதாகவும் சிக்கேரா தெரிவித் துள்ளார் இந்த நிலையில் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா மேம்படுத்தல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். என்றும் சிக்கேரா வலியுறுத்தியுள்ளார்.

27. ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சியில் எழுந்த ஆலயமும் ஆக்கப்பட்டோர் தொகுதி எது?
அ. நல்லூர் வீரமாகாளி
ஆ. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்
இ. பரராஜசேகரப் பிள்ளையார்
ஈ. உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார்
1. பரராஜசிங்கன், சங்கபோதி, அரசகேசரி, தொண்டமான்
2. பரராஜசிங்கன், அரசகேசரி, பரராஜசேகரன், கருணாகரத்தொண்டமான்
3. செம்பகப் பெருமன்னன், பரராஜசிங்கன், அரசகேசரி, தொண்டமான்
4. செகராஜசேகரன், அரசகேசரி, பரராஜசிங்கன், தொண்டமான்

28. சைவத்தின் முக்கண் என்று போற்றும் வகையில் புராணங்கள் அமைகிறது. அவற்றின் வழி ஆசிரியர்கள்.
அ. பெரியபுராணம்
ஆ. கந்தபுராணம்
இ. திருவிளையாடற்புராணம்
1. அருள்மொழி தேவர், காசியப்பமுனிவர், சுன்னாகம் வரபண்டிதர்
2. சேக்கிழார், கச்சியப்பசிவாச்சாரியார், பரணதேவர்
3. சேக்கிழார், கச்சியப்பசிவாச்சாரியார், பரஞ்சோதி
4. நம்பியாண்டார் நம்பி, கச்சியப்பமுனிவர், பரஞ்சோதி

29. சைவர்கள் வாழ்வின் சிவ விரதங்கள் முழுமையான சிந்தனைக்குரியன. அவை அனுஷ்டிக்கும் மூர்த்திகள்.
அ. சிவராத்திரி
ஆ. கேதாரகௌரி ஈஸ்வர நோன்பு
இ. திருவாதிரை
ஈ. பிரதோசம்
1. தை, ஐப்பசி, மார்கழி, கார்த்திகை
2. சிவலிங்கம், லிங்கம், நடராஜர், இடபம்
3. தட்சணாமூர்த்தி, கௌரியம்பாள், சிவகாமி, இடபரூபர்
4. இலிங்கோற்பவர், சிவலிங்கம், நடராஜர், இடபரூபர்

30. சைவசித்தாந்தம் முன்வைக்கும் உண்மைப் பொருள் வடிவில் அவற்றின் இயல்பு.
அ. பதி
ஆ. பசு
இ. பாசம்
1. அறிவித்தாலும் அறியாது, அறிவித்தாலும் அறியும், அறிவித்தாலும் உணரும்
2. அறிவிக்காமல் அறியும், அறிவித்தால் அறியும், அறிவித்தாலும் அறியாது
3. அறிவுடையபொருள், ஜடம் சம்பந்தமானது, மலம் சம்பந்தமானது
4. அறிவுடைய தலைவன், அறிவற்ற தலைவி, அறிவுப் பாவம்

| இலக்கியம் | ஆக்கியோர் | இடம் / நோக்கம் |
|---|---|---|
| A-தேவாரம் | F-வரதபண்தர் | K-திவையாறு |
| B-திருவாசகம் | G-மயில்வாகனம் புலவர் | L-சோதிடம் |
| C-சிவராத்திரி புராணம் | H-மணிவர்சகர் | M-விஜயன் |
| E-சரசோதி | I-தேனுவரைபெருமாள் | N-8ம் திருமுறை |
| E-யாழ்ப்பாண வைபவமாலை | J-நாவுக்கரசர் | O-சிவவிரத நோன்பு |

31. நாவுக்கரசருடைய வாழ்வுடன் தொடர்புடையது.
1. CJK 2. AJK 3. BJN 4. CTK

32. விஜயனுடைய வருகையோடு தொடர்புடைய செய்தி.
1. DFM 2. EIM 3. BGM 4. EGM

33. நல்லைக் குறைவஞ்சியை பாடியவர்
1. கணபதி ஐயர் 2. கூழங்கை தம்பிரான் 3. சின்னத்தம்பி ஐயர் 3. சேனாதிராஜ முதலியார்

34. சுதர்சன மூர்த்தி எழுந்தருளியாய் உள்ள தலம்
1. மாவிட்டபுரம் 2. நல்லூர் 3. வல்லிபுரம் 4. பொன்னாலை

35. சிவஞானபோதம் எத்தனை சூத்திரம், வெண்பா.
1. 10, 80 2. 12, 81 3. 8, 29 4. 2, 4

36. விஷ்ணு சங்கின் நாமம்
1. வலம்புரி 2. இடம்புரி 3. பாஞ்சன்யம் 4. வெண்சங்கு

37. மார்க்கண்டேயர் படலம் கந்தபுராணக் காண்டம் எது?
1. தேவ காண்டம் 2. அசுர காண்டம் 3. யுத்த காண்டம் 4. உற்பத்தி காண்டம்


38. விநாயகன் என்பதன் பொருள் யாது?
1. தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன்
2. திரிகரணம் கடந்தவன்
3. கணங்களின் தலைவன்
4. மோதகப்பிரியன்

39. வைகாசி விரதத்தன்று சிறப்பாக கடல்நீரில் பொங்கல் நடைபெறும் முருகன் தலம்.
1. வற்றாப்பளை கண்ணகை 2. அன்னதானக் கந்தன் 3. சித்தாண்டி முருகன் 4. உகந்தை முருகன்

40. ஆளுடை நம்பி புராணத்தினை அருளியவர்?
1. அருண்மொழித்தேவர் 2. கடவுள்மாமுனி 3. கச்சியப்பர் 4. பரதவமுனி







(ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 3 மணி



# கல்வி முரசு



## சைவ நெறி பகுதி - I

**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்னும் பொருள் தரும் நாமம்.
1. கணபதி 2. கணேசன் 3. விநாயகன் 4. விக்னேஸ்வரன்

02. பண்டிகை, விழாக்கள் என்பவற்றால் நாம் அடையும் பயன் யாது?
1. குடும்ப மகிழ்ச்சி
2. சைவ ஆசாரம்
3. விரத அனுட்டானம்
4. இறைபக்தியும் விருந்தோம்பலும்

03. தீட்சை என்ற சொல்லின் பொருள்.
1. மலத்தை கொடுத்து ஞானத்தை கொடுத்தல்
2. மலத்தை கொடுத்து ஞானத்தை கெடுத்தல்
3. விபூதியை அழகாய் மேனியில் பூசிக் கொள்ளல்
4. சைவ சமயி தீட்சை பெறல் அவசியம்

04. தெட்சணாயன காலம் என்றால் என்ன?
1. சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லுதல்
2. சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லுதல்
3. பூமி தெற்கு வடக்காகச் செல்லுதல்
4. பூமி வடக்குத் தெற்காகச் செல்லுதல்

05. சந்தக்கவிவல்லாளர் எனப் போற்றப்படுபவர் யார்?
1. சம்பந்தர் 2. குமரகுருபரர் 3. அருணகிரிநாதர் 4. அபிராமிப்பட்டர்

06. கந்தபுராண மூல இலக்கண நூல் எது?
1. ஸ்கந்த புராணம் 2. வீரசோழியம் 3. தொல்காப்பியம் 4. அகத்தியர் திரட்டு

07. உலகாயுதம், யோகாசாரம், மாத்தியமிகம் எங்கு அமையப் பெற்றுள்ளது.
1. சிவஞான போதம் 2. திருவருட்பயன் 3. சிவப்பிரகாசம் 4. சிவஞானசித்தியார்

08. கல்யாண கிரியார் என்று போற்றப்பட்டவர்.
1. யோகர்சுவாமி 2. செல்லப்பாசுவாமி 3. முத்துலிங்க சுவாமி 4. முத்துக்குமார சுவாமி

09. ஆறுமுக நாவலர் ஆசிரியராகக் கடமை புரிந்த காலம்.
1. 1841 முதல் 1851 வரை
2. 1841 முதல் 1845 வரை
3. 1848 முதல் 1877 வரை
4. 1841 முதல் 1848 வரை

10. சகளத் திருமேனியை எவ்வாறு அழைப்பர்.
1. உருவம் 2. அருவம் 3. அருவுருவம் 4. மேற்கூறியவையல்ல

**பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.**

11. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரசங்கம் நிகழ்த்திய சந்தர்ப்பம்.
அ. சைவ மக்களை ஆசார சீலர் ஆக்குதல்
ஆ. கோயில்களில் எல்லோரும் ஒன்று கூடச் செய்தல்
இ. கிறிஸ்தவ மத மாற்றத்தில் உள்ளவர்க்கு சமய உண்மையை உணர்த்தல்
ஈ. கேட்டல் அவசியம் என்பதை உறுதிப்படுத்தல்
1. 'அ' வும் 'இ' 2. 'ஆ' வும் 'இ' 3. 'அ' வும் 'ஈ' 4. 'ஆ' வும் 'ஈ'

12. பின்வருவனவற்றுள் சைவ நாயன்மார்கள் அற்புதம் நிகழ்த்திய சந்தர்ப்பம்.
அ. அனைத்திற்கும் இறைவன் காரணம் என நிறுவும் போது
ஆ. துன்புற்றவரை பார்க்கும் போது
இ. வைதீக சமயத்தை போற்றும் போது
ஈ. சிவனடியார்க்கு நன்மை செய்யும் போது

1. அ, ஆ 2. ஆ, இ 3. அ, ஈ 4. இ, ஈ

13. கந்தபுராண காவியங்கள் கூறுகின்ற முக்கிய கருத்துக்களில் சரியான கூற்று
அ. நன்றிமறவாப் பண்பு உடையவர்களாக வாழ வேண்டும்.
ஆ. சூரபத்மனுடைய திறன் பாராட்டப்படுவது அவசியம்.
இ. தேவர்கள் தேடும் அவலம் தாம் தேடிய நற்பயன்
ஈ. சிவ நிந்தை புரியாது வாழுவதே சாலச் சிறந்தது.

1. அ, இ 2. ஆ. ஈ 3. அ, ஈ 4. இ. ஈ

14. மனிதன் மனிதனாக வாழ விலக்கி வைக்கப்பட வேண்டியவை எவை?
அ. மனம் மொழி மெய்யை அடக்குதல்
ஆ. இன்னா மொழிதல், புறங்கூறுதல், பொறாமை கொள்ளல்
இ. சூதாட்டம், மது, மாது விரும்புதல், கொள்ளை, கொலை செய்தல்
ஈ. புகழ் பாடுதல், சமயாசாரங்களைப் பேணுதல்

1. அ, இ 2. அ, ஈ 3. ஆ, இ 4. ஆ, ஈ

15. சைவ சமயத்தின் சிறப்பிலட்சணங்களாக அமைவன.
அ. தமக்கும் சமூகத்துக்கும் உதவியாக வாழுதல்
ஆ. அர்ப்பண சிந்தையுடன் வழிபாட்டில் ஈடுபடல்
இ. அன்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
ஈ. சகிப்புத் தன்மையும், சமநோக்குடையது

1. அ, இ 2. இ, ஈ 3. ஆ, இ 4. அ, ஈ

16. செல்லப்பா சுவாமிகளுடன் தொடர்புடைய சிந்தனைகளாவன.
அ. எல்லாம் செப்படி வித்தை, அப்படியே உள்ளது, முழுவதும் உண்மை
ஆ. நெற்றிக்கு விபூதி, கடமை தவறினால் கடவுளைக் கணமாட்டாய்
இ. பட்டகட்டையிற் பகற்குருடு செல்கிறது.
ஈ. நல்லூர் வில்வ மரத்தடியே வாழ்விடமாகக் கொண்டவர்

1. அ, ஈ 2. இ, ஈ 3. ஆ, இ 4. அ, ஆ

17. மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் சிறப்பினை ஆராயும்போது
அ. இராமன் சிவலிங்கம் அமைத்து கோதண்ட வில்லினால் நீர் பெற்றுப் பூசித்தார்.
ஆ. பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகும்
இ. லிங்க விநாயகர் திருவுருவமும் மிளிர்கிறது
ஈ. ஈழத்தில் இருபது நாள் மகோற்சவம் நடைபெறும்

1. அ, ஈ 2. அ, இ 3. ஆ, இ 4. ஆ, ஈ

18. 20ஆம் நூற்றாண்டில் கிழக்கிலங்கை மட்டக்களப்பில் சைவம் வாழ வைத்தவர்.
அ. சேர்.பொன் அருணாசலம், சேர்.பொன்.இராமநாதன், மாதகல் அ.ராம்பையா
ஆ. சைவ சமய சிந்தாமணி, இந்து சமய மாத மருத்துவம் மான்மியம் எழுதினார்.
இ. கிராமம் தோறும் அருணாசல தேசிகர், வித்துவான் சரவணமுத்து சைவம் பரப்பினார்.
ஈ. பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் இந்து நாகரீகத்துறையை வளப்படுத்தினார்.

1. அ, ஆ 2. இ, ஈ 3. ஆ, ஈ 4. ஆ, இ

19. நாட்டார் வழிபாட்டில் கப்பூசனார் வழிபாட்டின் ஒழுங்கு
அ. கப்புகன் வாயினை துணியினால் கட்டி மௌன பூசை செய்தல்
ஆ. பாலன் புலம்புகிறேன் பாலன்முகம் பார் தாயே என வேண்டல்
இ. கருவறை இட்டும், திரை திறந்தும் பூசையாற்றுவர்
ஈ. கையில் சைவச்சலங்கை, சிரசில் உருத்திராட்சம், சாட்டை, பிரம்பு, சூலம்

1. அ, இ 2. ஆ, இ 3. அ, ஈ 4. இ, ஈ



20. சுபக்கிரியை வரிசையில் திருமண மேடையில் காணக்கூடியவை
அ. அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், உத்தர கிரியை
ஆ. கன்னிகாதான், கோதரிசனம், அருந்ததி, பார்த்தல்
இ. கூறை கொடுத்தல், அம்மி மிதித்தல், ஏழடி வைத்தல்
ஈ. நவக்கிரக பூசை, சண்டேஸ்வர பூசை, ஸ்ரீசக்கர பூசை

1. அ, இ 2. ஆ, ஈ 3. ஆ, இ 4. அ, ஈ

21. பின்வருவனவற்றை ஆக்கியோர் தொடர்பை தெரிவு செய்க?
அ. சிவஞானபோதம் ஆ. உண்மை விளக்கம்
இ. சிவஞான சித்தியார் ஈ. திருவருட்பயன்

1. சம்பந்தர், சுந்தரர், உமாபதி சிவன், அருள்நந்தி
2. மெய்கண்ட தேவர், மனவாசகம், கடந்ததேவர், அருள்நந்தி சிவம், உமாபதி சிவம்
3. பெரியாழ்வார், திருக்கடலூர் உய்யவந்ததேவர், உமாபதி சிவம்
4. சிவஞானமுனிவர், திருமூவர், கச்சியப்பர், சேக்கிழார்

22. பின்வரும் இலக்கியங்களை அருளியவர்கள் கொண்ட குழு.
அ. தேவாரம் ஆ. திருமந்திரம்
இ. திருவருட்பா ஈ. திருவாசகம்

1. திருஞான சம்பந்தர், கச்சியப்பர், உமாபதி சிவச்சாரியார், மணிவாசகர்
2. திருமூலர், திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவர், மறைஞானசம்பந்தர்
3. திருநாவுக்கரசர், திருமூலர், உமாபதிசிவம், மணிவாசகர்
4. சுந்தரர், சேந்தனார், செல்லப்பா, மணிவாகசர்

23. நாயன்மார் வரலாறு படைத்தவர்கள் திருமுறைகளில் இடம்பெற்றனர்.அவர்கள் வழி இலக்கியத் தொகுதியைத் தருக?
அ. சுந்தரர் ஆ. நம்பியாண்டார் நம்பி இ. சேக்கிழார்
1. திருத்தொண்டர் தொகை, ஏழாம் திருமுறை, பெரிய புராணம்
2. திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் தொகை, திருப்புராணம்
3. திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம்
4. திருக்கோவை, திருமுகப்பாசுவம், திருத் தொண்டர் புராணம்

24. பின்வரும் பாசுரங்களை அருளிய ஆழ்வார் திருக்கூட்டம்
அ. திருவிருத்தம் ஆ. திருப்பல்லாண்டு
இ. திருநெடுந்தாண்டவம் ஈ. திருப்பள்ளியெழுச்சி
1. பூதத்து ஆழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார்
2. திருப்பாணாழ்வார், பூதத்து ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள்
3. ஆண்டாள், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், பேயாழ்வார்
4. நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார்

25. ஈழத்து பழம் பெரும் சைவாலயம் பெருமைக்குரியன அமைந்த இடம்
அ. திருத்தபலேஸ்வரம் ஆ. தென்னகலை
இ. திருக்கேதீஸ்வரம் ஈ. அழகேஸ்வரம்
1. கீரிமலை, திருகோணமலை, மன்னார், சிலாபம்
2. தெய்வேந்திரமுனை, மட்டக்களப்பு, மாந்தை, கொச்சிக்கொடை
3. கீரிமலை, ஒட்டுசுட்டான், திருகோணமலை, சிலாபம்
4. மன்னார், சிலாபம், திருகோணமலை, நகுலகிரி

26. அறநீதி நூல்கள் வரிசையில் ஆசிரியர்களை குறிப்பிடுக.
அ. கொன்றைவேந்தன் ஆ. திருக்குறள்
இ. மனுதர்மசாஸ்திரம் ஈ. திருமந்திரம்
1. ஔவையார், பௌணந்திமுனி, ஸ்ரீநாதமுனி, மனு
2. ஔவையார், திருவள்ளுவர், மனு, திருமூலர்
3. காளிதாசர், திருவள்ளுவர், கொடில்லியர், திருஞானசம்பந்தர்
4. இளங்கோவடிகள், கம்பர், பாரதியார், திருமூலர்

# வெயிலுக்கு இதம் தரும் ....

மனிதனின் மிகப்பழமையான உணவுகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது வெங்காயம். ரத்தத்தைச் சுத்திகரிக்கும் என்ற நம்பிக்கை இருந்ததால் பண்டைய கிரீஸைச் சேர்ந்த வீரர்கள் வெங்காயத்தை அதிக மாக உட்கொண்டார்கள். ரோமைச் சேர்ந்த மல்யுத்த வீரர்கள், வெஙகாயத்தை அரைத்து உடம்பில் பூசிக் கொள்வார்கள்.

இதற்கு உடல்வலிமையை அது கூட்டும் எனற நம்பிக்கை தான் காரணம். வெயிலில் அலைநது, வியர்க்க விறுவிறுக்க வீட்டுக்குள்ளேயே வந்ததும் சிலருக்கு நீர் வந்துவிடும். ஒரு வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, அதை ஒரு பேணியில் இட்டு தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைக் குடித்தால் நீர்க் கடுப்பு உடனே நின்றுவிடும்.



# 12 வது பிறந்த நாள்



அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பகுதியில் உள்ள இந்தப் பூனை பிறக்கும்போதே இரு முகங்களுடன் பிறந்திருந்தது. இந்த அசாதாரணமான பூனையின் இரட்டை முகங்கள் Janus எனப்படும் நிலையால்தான் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பிறப்பவை சில நாட்களே உயிர்வாழும். இது அதற்கு மாறாக உயிர்தப்பித் தனது 12 ஆவது பிறந்த நாளையும் கொண்டாடுவதென்பது அதிசயம் என் கின்றனர்.


இந்தப் பூனை தற்போது கின்னசில் பதியப்படப்போகின்றது. இதன் சொந்தக்காரரான ஒரு மிருகவைத்தியம் செய்யும் தாதியாவார்.அவர் இது வரையும் இதுபற்றி வெளிப் படுத்த விரும்பாமல் இருந்திருந்தார்.

# நிறம் மாறும் முதலை

ஆவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ளது கீலாங் என்ற இடம். இப்பகுதியில் உள்ள பாதுகாக்கப்பட்ட பெரிய ஏரியில் ஸ்நாப்பி என்ற முதலை உள்ளது. இது 8 அடி நீளம் உடையது. முதலைக்குரிய அனைத்து குணங்களுடனும் பார்வையாளர்களை மிரட்டி வந்தது.


இதைப் பார்க்க ஏராளமானோர் வந்து செல்கின்றனர். இந்த முதலை திடீரென நிறம் மாறத் தொடங்கியது. தற்போது ஆரஞ்சு நிறத்துக்கு ஸ்நாப்பி முதலை மாறிவிட்டது. இந்த அதிசயத்தை காண பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்பைவிட அதிகரித்து விட்டது.

முதலை நிறம் மாறியது வியப்பாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் முதலையின் நிறம் மாற்றத்துக்கான காரணங்கள் குறித்து ஆராய மருத்துவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.




# ஒளியை விஞ்சிய வேகத்தில்...

ஒளி பயணிக்கும் வேகத்தை விட கூடுதலான வேகத்தில் அணுக்களிலும் சிறிய துகள்கள் பயணிப்பதைத் தங்கள் ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது என்று சுவிட்சர்லாந்தில் உள்ள செர்ன் ஆராய்ச்சிக்கூடத்தின் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.அந்த முடிவு உண்மையானால் பிரபஞ்சத்தின் இயல்பு பற்றிய மிக முக்கியமான பௌதீக விதிகளில் ஒன்றை பொய்யாக்குவதாக இந்த கண்டுபிடிப்பு அமையும்.



தங்களது பரிசோதனை தந்துள்ள இந்த முடிவு சரிதானா என்பதை மற்றவர்களும் ஆராய்ச்சிகளை நடத்தி உறுதிசெய்ய வேண்டும் அல்லது தங்களது பிழையை சுட்டிக்காட்ட வேண்டும் என இந்த விஞ்ஞானிகள் விரும்புகின்றனர்.தற்போது சுவிஸ்சர்லாந்தின் செர்ன் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து சுமார் 732 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இத்தாலிய ஆராய்ச்சிக் கூடம் ஒன்றுக்கு அணுவிலும் சிறிய வஸ்துக்களான நியூட்ரினோஸ்க கற்றை ஒன்றை அனுப்பி அது பயணித்த நேரத்தை அளந்துள்ளனர்.

தாங்கள் அளந்தது சரிதானா என்பதை உறுதிசெய்வதற்காக இவர்கள் 15 ஆயிரம் முறை திரும்பத் திரும்பச் செய்து பார்த்திருக்கிறார்கள்.ஆனால் அத்தனை முறையிலும் இந்த வஸ்து ஒளியை விட வேகமாகப் பயணிப்பதாகவே முடிவுகள் காட்டியிருந்தன. தாங்கள் கண்டறிந்தது நிஜம்தானா என்று இவர்களால் இன்னும் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

# 37 கோடி ஆண்டு பழைமையான மீன் படிமம்

7 கோடி ஆண்டுக்கு முற்பட்ட பிரமாண்ட மீன் படிமம் ஒன்று கனடாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆர்க்டிக் கடல் பகுதியில் இந்த படிமம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதுவரை கண்டெடுக்கப்பட்ட மீன் படிமங்களிலேயே மிகவும் பழையதும் அரிய வகையை சேர்ந்ததுமான மீனின் படிமம் இதுவென ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் இது வட அமெரிக்காவின் கடல் பகுதியில் இருந்து இப்பகுதிக்கு வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.



வித்தியாசமான துடுப்பை கொண்ட இந்த மீன், லாக்கோக்நாதுஸ் எம்ப்ரியி எனப்படுகிறது.இந்த மீன் வகைகள் மிகப்பெரிய தலை அமைப்பு, சிறிய கண்கள், பெரிய வலுவான தாடையமைப்பு மற்றும் கூர்மையான பற்களும் உடையது

# குழப்பமான வாழ்க்கையால் மூட்டு நோய்கள்

வாழ்க்கை முறையில் குழப்பகரமான மாற்றங்கள் காரணமாக மக்களிடையே மூட்டு சார்ந்த நோய்களில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். இடுப்பு மற்றும் கழுத்து பகுதிகளில் வலி ஏற்படுகின்ற பெரும்பாலானவர்கள் சிகிச்சைகளுக்காக நாளாந்தம் வைத்தியசாலையை நாடி வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மூட்டு சார்ந்த நோய்ப்பிரிவின் விசேட நிபுணர் டாக்டர் லலித் விஜேவர்தன கூறினார். நாட்டில் பல்வேறு காரணங்களினால் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதாக குறிப்பிட்ட விசேட வைத்திய நிபுணர் உடற் பயிற்சியில் ஈடுபடாமை துரித உணவுகளை உட் கொள்ளல் என்பனவே இதற்குக் காரணமாக அமைந்துள்ளதென குறிப்பிட்டார்.



அதிக எடை, உடற்பயிற்சி இன்மையால் மூட்டுக்களில் பிடிப்பு போன்ற குறைனாடுகளினால் கழுத்து மற்றும் இடுப்புவலி லினால் அவதியுறும் பலர் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடுவதாக வைத்தியர் தெரி விக்கின்றார்.

ஒரேநிலையில் அதிக நேரததை செலவிடுவதே இந்த குறைபாடுகள் ஏற்பட முக்கிய காரணமாக அமைந்துள்ளது எனறும் வீடுகளில் தொலைக்காட்சி பார்ப்பதற் காக அதிக நேரத்தை செலவிடுவதும் ஓய்வு நேரத்தை ஒரே இடத்திலிருந்து செலவிடுவதும் மூடடு வலிகளுக்கு ஏதுவாக அமைகின்றது என்றார்.

# 1.4 மில்லியன் பவுண்ஸ்



ஒரு செம்மறி ஆட்டின் பெறுமதி 1.4 மில்லியன் பவுண்கள் என்று சொன்னால் நம்புவீர்களா? சொன்னாலும் சொல்லாவிட்டா லும் நம்பித்தான் ஆக வேண்டும். உலகில் 1000 வரையான Dolan வகை செம்மறியாடுகள் மட்டுமே எஞ்சியுள்ளதான தெரிவிக்கப்பட்டுள்ளது. இவைதான் தற்போது சீனப் பணக்காரர்களின் சேகரிப்புகளாக உள்ளன. அக்சு என்ற நகரைச் சேர்ந்த இவ்வகை ஆடுகளை வளர்ப்பவர் ஒருவர் தெரிவிக்கையில், Uighur பிரிவைச்சேர்ந்த பெரிய பெரிய முஸ்லிம் பணக்காரர்களே அங்கு வந்து இவ்வகை ஆடுகளை வாங்கிச்செல்வதாகக் குறிப்பிட்டார்.

இவை பெரும்பாலும் வேகமாக வளர்ந்து விடுகின்றன. அதிகளவு இறைச்சியையும் கொண்டுள்ளன. எனினும் இவற்றை அப்பணக்காரர்கள் வளர்ப்பதற்காகவே வாங்கிச் செல்கின்றனர்.

இவை எவ்வளவு கடும் நிறமாக இருக்கின்றனவோ அவ்வளவிற்குச் சிறப்பானவையாக இருக்கும். அதுபோலக் காதுகள் எவ்வளவு பெரிதாக இருக்கின்றனவோ அவற்றின் விலையும் அதிகமாக இருக்கும். இவை 6 மாதங்களிலேயே 200 இறாத்தல் வளர்ந்து விடுகின்றன.

# இந்தியாவில் ஆண்டுதோறும் 3கோடி பேருக்கு மாரடைப்பு

(சென்னை)

இந்தியாவில் ஆண்டுக்கு 3 கோடி பேர் மாரடைப்பால் தாக்கப்பட்டு அதில் ஒரு கோடி பேர் ஓரிரு நிமிடங்களில் இறந்துவிடுகிறார்கள் என இதய நோயியால் நிபுணர் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

உலக இதய நாளின் முக்கிய குறிக்கோள் மாரடைப்பை வருமுன் காப்பது, வந்தபின் பூரண குணம் அடையச் செய்வது என்பதாகும்.

இந்த அணுகுமுறை இந்தியர்களுக்கு மிகவும் பொருந்தும். ஏனெனில் அமெரிக்க, ஐரோப்பியர்களைவிட 4 மடங்கும், சீனர்களைவிட 10 மடங்கும், ஜப்பானியர்களைவிட 20 மடங்கும் இந்தியர்களுக்கு மாரடைப்பு ஏற்படுகிறது.

25 முதல் 30 வயதுள்ள இளைஞர்களை மாரடைப்பு தாக்குவது தான் அதிர்ச்சி அளிக்கும் விடயம் போட்டி, பொறாமை போன்ற எதிர்மறை உணர்வுகளால் மூளையில் வெளிப்படும் எண்ண அலைகள் அதிகரிக்கின்றன.

அதன் விளைவாக வேண்டாத அட்ரீனலின், கார்டிசால் போன்ற ஹார்மோன்கள் இரத்தத்தில் கலப்பதால் ஏற்படும் பின் விளைவுகளாக எடை கூடுவது, பதற்றம், உடல் நடுக்கம், அதிக வியர்வை, இதயத் துடிப்பு அதிகரித்தல், இரத்த அழுத்தம் கூடுதல், இரத்த சர்க்கரை அளவு உயர்வது ஆகியன இதய ரத்தக் குழாய்களில் அடைப்பு வருவதற்கும், சுருங்குவதற்கும் காரணமாகி மாரடைப்பை ஏற்படுத்துகிறது.

இதில் இருந்து விடுபட ஒரே வழி வாழ்க்கைமுறையை சீர்படுத்துவதுதான் சிந்தனை, சொல், செயல் மூன்றும் சீராக இருந்தால் மூளையின் அலைகள் ஆல்பா நிலையில் செயல்பட்டு என்டார்பின் செரடோனின் மெலடோனின் போன்ற நல்ல ஹார் மோன்கள் அதிக அளவில் உற்பத்தியாகி இரத்தத்தில் கலப்பதால் இரத்தக்குழாய்களில் அடைப்பு வருவதை தவிர்க்கலாம் ஏற்கனவே ஏற்பட்டிருந்த அடைப்புகளையும் கரைக்கலாம் என்றார்.




# விஞ்ஞானிகளுக்கான விருது இந்தியர்கள் மூவர் தெரிவு


(சென்னை)

அமெரிக்க ஜனாதிபதியால் சிறந்த விஞ்ஞானிகளுக்கான விருதுக்குப்பெயரிடப்பட்டுள்ளவர்களுள் இந்தியர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்ட விஞ்ஞானிகளை கௌரவிக்கும் முகமாக அமெரிக்காவின் இந்த உயரிய விருது வழங்கப்படுகின்றது.

இந்திய விஞ்ஞானிகள் மூவர் உள்ளிட்ட 12 பேர் இந்த விருதுக்கான ஜனாதிபதி ஒபாமாவால் பெயரிடப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் இறுதியில் வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ள நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவினால் நியமிக்கப்பட்டவர்களே விருதுகளுக்கான தெரிவுக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

# சன் குழுமத்திலிருந்து விலகினார் சக்சேனா



(சென்னை)

சன் பிக்சர்ஸ் மற்றும் சன் குழுமத்தின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகிவிட்டதாக தனது வழக்கறிஞர் மூலம் ஹன்ஸ்ராஜ் சக்சேனா அறிவித்துள்ளார்.

சன் குழுமத்தில் மிகவும் பலம் வாய்ந்த மனிதராக உலா வந்தவர் ஹன்ஸ்ராஜ் சக்சேனா. சன் குழுமம், தனியாக சன் பிக்சர்ஸ் என்ற திரைப்பட வர்த்தகப் பிரிவை தொடங்கிய போது அதன் தலைமைப் பொறுப்பேற்றார். சன் பிக்சர்ஸ் தயாரித்த எந்திரன் படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளராக இருந்தார் சக்சேனா. ஆனால் ஆட்சி மாற்றத்துக்குப் பின்பு, பல்வேறு மோசடி, மிரட்டல் வழக்குகளில் சக்சேனாவைக் கைது செய்தது அ.தி.மு.க அரசு.

கடந்த மூன்று மாதகால மாக ஏராளமான வழக்குகளில் அடுத்தடுத்து கைதாகி, நீதிமன்ற காவல், பொலிஸ் காவல் என தொடர் சிறைவாசம் அனுபவித்து வந்தார் சக்சேனா.

இந்நிலையில் அனைத்து வழக்குகளிலும் நிபந்தனை ஜாமீன் பெற்று இப்போது வெளியில் வந்துள்ளார். இனி அவர் சன் குழுமத்தில் தொடர்வாரா என்ற கேள்வி எழுந்தது. மேலும் சன் பிக்சர்ஸ் நிறுவனம் தமிழ் சினிமாவில் நீடித்திருக்குமா என்றும் கேள்வி எழுந்தது.

இந் நிலையில் அதிகாரப்பூர்வ ராஜினாமாக் கடிதத்தையும் அவர் கலாநிதி மாறனுக்கு அனுப்பி வைத்தார். அக்கடிதத்தை கலாநிதியும் ஏற்றுக்கொண்டுள்ளார். இத்தகவல்களை சக்சேனாவின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

# ஸ்பெக்ரம் விவகாரத்தில் சிதம்பரம்; பிரதமரை சந்திப்பார் சோனியா

(புதுடில்லி)

ஸ்பெக்ரம் ஒதுக்கீடு தொடர்பாக பிரதமருக்கு நிதி அமைச்சு அனுப்பிய கடிதம் குறித்து காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கவுள்ளார்.

ஸ்பெக்டரம் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட இழப்பினை தடுப்பதில் அப்போதைய நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தோல்வியடைந்ததாக குறித்த கடித்ததில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போதைய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் கையொப்பதுடன் வெளியான இந்தக் கடிதத்தினால் மத்திய அரசுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் உள்விவகார அமைச்சர் பதவியில் இருந்து ப.சிதம்பரம் பதவி விலக வேண்டுமென்ற எதிர்கட்சிகளின் கோரிக்கை வலுவடைந்து வருவதாக தெரிவிக் கப்படுகின்றது. இதனிடையே ப.சிதம்பரம் மற்றும் பிரணாப் முகர்ஜி ஆகியோர் தனித் தனியாக சந்தித்து சோனியா காந்தி கலந்துரையாடவுள்ளதாக இந்திய தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

# கொள்ளை, ஊழல் இடம்பெறுவதற்கு காங்கிரஸ் கட்சியே முக்கிய காரணம்

(சென்னை)

அன்னிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என யோகா குரு ராம்தேவ் கூறியுள்ளார். ஊழல் மற்றும் கறுப்புப் பணத்திற்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 10 ஆயிரம் கி.மீ தூர சுவாபிமான் யாத்திரையை யோகா குரு ராம்தேவ் கடந்த 20ஆம் திகதி உத்திர பிரதேச மாநிலம் ஜான்சியில் தொடக்கினார்.


தற்போது உன்னாவோ சென்றடைந்துள்ள அவர் அங்கு நிருபர்களிடம் கூறியதாவது: மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நாட்டை கொள்ளை அடிக்கிறது. பெரும் ஊழலிலும் ஈடுபடுகிறது.

இந்த அரசு ஊழலை முடிவுக்கு கொண்டு வரும் அன்னிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்டு கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள் தனமானது. நாட்டை கொள்ளை அடிக்க காங்கிரசே காரணம். அதனால் தான் அந்த அரசுக்கு எதிரான மக்களின் கருத்தை திரட்ட முற்பட்டுள்ளேன்.

காங்கிரஸ் கட்சியினரை இனி லோக்சபாவுக்கும், சட்டசபைக்கும் செல்லாமல் மக்கள் தடுக்க வேண்டும். தேர்தல்களில் அவர்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும். நாட்டை காப்பாற்ற யார் முன்வருகின்றனரோ அவர்களுக்கு தேர்தலில் ஆதரவு அளிக்க வேண்டும் என்றார்.

## மெய்தான் பாருங்கோ!

# அங்கவீனமும், அடாவடித்தனமும்



நான் இப்ப உங்களுக்கு ஒரு விசயம் சொல்லவாறன். கவனமாக கேளுங்கோ அப்பதான் நாங்கள் ஏன் இப்பவும் இழி நிலையில இருக்கிறம் எண்ட காரணத்தில் ஒரு பக்கம் விளங்க வரும் கண்டியளோ!

போரால பாதிக்கப்பட்ட எங்கட சனங்களுக்கு... அதுவும் சொத்தி முடமாகிப் போன ஆட்களுக்கு இப்ப ஒரு புதுவிதமான மனோபாவம் தொத்தியிட்டுது பாருங்கோ அதுவும் எல்லோரும் இல்லை. சோம்பேறித் தனத்தில் உடம்பு வளக்கிற சில பேருக்குத்தான் இந்த வியாதி பிடிச்சிட்டுது.

அது என்னெண்டு கேட்கிறியளோ? சொல்லுறன் கேளுங்கோ.

போருக்கை ஷெல்லடி... கிபிரடியில கை,கால் இழந்ததுகள் எங்கட சனங்களிட்டை ஒரு அனுதாபத்தைப் பெறுகிறதுக்கு சில அடாவடித்தனமான செயற்பாடுகளில இப்ப இறங்கியிருக்குதுகள்.

கிட்டடியில எங்கட ஊர்ப்பக்கம் நடந்த ஒரு சங்கதி இது.

சண்டை நடக்கேக்கை ஷெல்விழுந்து வெடிச்சாப்போல ஒரு பொடியனுக்கு கால் இல்லாமல் போச்சுது. தாய்மனிசியும் அந்த இடத்தில செத்ததோடை இனம்சனம் இல்லாத அந்தப் பொடியன் புல்மோட்டைக்குப் போய் பிறகு செட்டிகுளம் அகதிமுகாம் வந்து பேந்து இப்ப மீள்குடியேற்றமெண்டு வந்து நிக்குது. இப்ப ஊருக்கு வந்தாப்போல சனங்கள் எல்லாம் அந்தப் பெடியனைப் பாத்து பரிதாபப்பட பெடியன் சாடைமாடையாக 'குழப்படி' விடத்தொடங்கியிட்டுது.

அதென்னண்டாப் பாருங்கோ! தனக்குத் தாய் தேப்பன் இல்லை... சகோதரங்கள் இல்லை... அதோடை கால் இல்லை... கையுக்குள்ள 'பீஸ்' கிடக்குது... தான் எதுவும் செய்தால் பாக்கிறவை எதுவும் கதைக்கமாட்டினம்... எதிர்த்துக் கேட்க மாட்டினம்... தனக்காகப் பரிதாபப்படுவினம்... பரிந்துரைப்பினம்... எண்டதொரு மனப்பான்மை வளந்திட்டுது. அதாலை பொடியன் இப்ப அண்டை அயலுகளோடை 'கொழுத்தாடு' பிடிக்க வெளிக்கிட்டிருக்குது.

பக்கத்துவீட்டுக்காரன் போட்ட வேலியை அடாத்தா அரைவாசியைப் புடிச்சு ஆட்களைக் கொண்டு கம்பிவேலி போட, அந்த வீட்டுக்காரன் கால் இல்லாத பொடியன் எண்டும் பாராமல் கையை வைக்கப்போக பிரச்சினை பெரிசாப் போய், வேலி போட வந்தவங்கள் விலக்குப் புடிச்சு சமாளிச்சு விட்டிட்டாங்கள்.

ஏற்கனவே பொடியனைப் பற்றி ஊர்ச்சனத்துக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. தாய்க்காரிக்குக் கூட பெத்ததாயெண்டும் பாராமல் அடிக்கிறவர் மொக்கன், முரடன்... எண்டுதான் சனம் சொல்லும். பொடியன் இப்ப என்னடாவெண்டால், காலில்லாத நிலையில் சனம் தனக்காகக் கதைக்கும் எண்டு எதிர்பாக்குது. நீங்கள் இந்தப் பொடியனைப்பற்றி என்ன நினைக்கிறியள்?

எனக்கு உதைச் சொல்லத்தான் ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகுது.

அண்டைக்கொருக்கா விசுவமடுப் பக்கம் பஸ்சில போய்க்கொண்டிருந்தனான் கண்டியளே! இடையில உடையார்கட்டுப் பக்கம் ஒரு பொடிச்சி ஒரு கையில்லாத நிலையில ஏறினாள். நடத்துனரிட்டை காசுகுடுத்து டிக்கற்றை வாங்கிக்கொண்டு, நடுப்பக்கமாய் போய் ஒரு ஆம்பிளையை எழும்பும்படி சொல்ல அந்தாள் திகைச்சுப் போச்சுது. தன்ர கையில்லாத பக்கத்தைக் காட்டித் தான் சீற்றில இருக்கப் போவதாகச் சொன்னபோது, அந்தாள் ஒண்டும் பேசாமல் எழும்பிப் போய் முன்னுக்குக் கம்பியைப் பிடிச்சுக்கொண்டு பேசாமல் நிண்டுது. இந்தச் செய்கை பெரும்பாலான சனங்களுக்கு பிடிக்கேல்லை அதுகள் அந்தப் பொடிச்சியை ஒரு மாதிரிப் பாத்ததிலிருந்து என்னால விளங்கிள்கொள்ள முடிஞ்சுது.

ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு போதுமானது போல, போரால அங்கவீனமாய் போயிருக்கிற மற்றச்சனங்களையும் இந்தப் பொடியனைப் போல ஆட்கள் செய்யிறவேலையால இனி ஒரு கேள்விக்குறியோடை, சந்தேகப் பார்வையோடை தான் பாக்கவேண்டி வரப்போகுது பாருங்கோ.

முன்னைய காலங்களில போரை வைச்சுப் பிழைப்பு நடத்திச்சுது ஒரு கூட்டம்... போருக்குப் பிறகு அகதிச்சனங்களை வைச்சு சுயலாப அரசியல் நடத்துது இன்னொரு கூட்டம்... இதுக்குள்ள தங்களைப் போரால பாதிக்கப்பட்டதெண்டு காட்டிக்கொண்டு, சனங்களிட்டை அனுதாபத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த அனுதாப அலைக்குள்ள கயமைத்தனம் புரியிற சில கழிசடை மனிசரை எங்கட சனம் சரியாப் புரிஞ்சு நடக்க வேணும் கண்டியளே!

கடந்தகாலங்களில் நடந்த இனவாதப் போருக்குள்ள நாங்கள் எல்லாரும் தான் பாதிக்கப்பட்டிருக்கிறம். அதுவும் வன்னியில நடந்த போரின் உச்சத்துக்குள்ள நாங்கள் இழந்து போய் நிற்கிறது கொஞ்சம் நஞ்சமல்ல இதுக்குள்ள பாதிக்கப்பட்டுப் போயிருக்கிற எங்களுக்கு பாதிக்கப்பட்ட உறுப்புகளைக் காட்டி, மேலும் பாதிப்பை உண்டு பண்ணுறவர்களுக்கு ஒருத்தரும் இடமளிக்கக் கூடாது கண்டியளே!

அனுதாபம் என்கிறது ஒருவருடைய மனதிலிருந்து பிறக்கிறதேயொழிய அங்கவீனமான உறுப்புகளைக் காட்டி பெறுவதல்ல எண்ட விளக்கத்தை உந்த அடாவடித்தனம் பண்ணுற அங்கவீனமான ஆட்கள் சரியாப் புரிஞ்சு நடந்தா சமூகத்தில ஒரு பிரச்சினை குறைஞ்ச மாதிரியிருக்கும். ஏனென்டா அங்கவீனம் எண்டு சொல்லுறது ஒரு வியாபாரப்பொருள் இல்லைக் கண்டியளே!

-சின்னக்குட்டி சின்னச்சாமி-

உலகச் செய்திகள்

# சிரியாவுக்கான தடைவிதிப்புத் தீர்மானம் தளர்வான நிலையில் ஐரோப்பிய நாடுகள்

சிரியா ஜனாதிபதி பஷார் அல் அஷார்ட்டுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் உடனடித் தடைகளை விதிக்கும் தீர்மானத்தை கைவிடுவதற்கு ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்துள்ளன.எனினும் எதிர்காலத்தில் தடைகள் விதிப்பது குறித்து ஆராய்ந்துவருவதாக அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன், போர்த்துக்கல் உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் சிரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

இந்த நிலையில் ரஷ்யா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் சிரியாவுக்கு எதிராக உடனடித் தடைகளை விதிப்பதற்கு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றன. இதன் காரணமாக உடனடித் தடை விதிக்கும் தீர்மானத்தில் ஐரோப்பிய நாடுகள் சற்று தளர்வான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன.எனினும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் வாக்கெடுப்பு நடத்தி இறுதி முடிவுகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிரியாவில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் நிலையில் வன்முறைகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் விமான விபத்து 18 பேர் பரிதாபகரமாக மரணம்



இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலை விமானம் ஒன்று விபத்துக்குள்ளனதில் 18பேர் மரணமடைந்துள்ளனர். விமானத்தில் 3 ஊழியர்களும், 15 பயணிகளும் இருந்துள்ளனர். சுமத்ரா தீவில் தரை இறங்க வேண்டிய அந்த விமானத்தில் திடீரென இயந்திரக்கோளாறு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் அந்த விமானம் பகோராக் என்ற கிராமத்தில் தரையில் விழுந்தது. வேகமாக வந்து தரையில் மோதியதால் விமானம் பல துண்டுகளாக நொறுங்கி சிதறியது.

சிலரது உடல் அடையாளம் காண முடியாதபடி சிதைந்து விட்டது. விமான விபத்து குறித்து பகோராக் கிராம மக்கள் தகவல் கொடுத்த பின்பே அதிகாரிகளுக்கு தெரிய வந்தது. இதனால் மீட்பு பணிகள் மிகவும் தாமதமாகின தொடங்கின.

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ஒரு படகு விபத்தில் 20-க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். அந்த சோகம் நீங்குவதற்குள் சிறு விமான விபத்தில் 18 பேர் பலியான சோகம் நிகழ்ந்துள்ளது.

# பதில்தாக்குதல் நடத்தப்படும் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை

அமெரிக்கா, பாகிஸ்தான் இடையேயான சிக்கலை மேலும் அதிகப்படுத்தும் விதத்தில் ஐ.எஸ்.ஐ தலைவர் அகமது சுஜா பாஷா, சி.ஐ.ஏ தலைவர் டேவிட் பீட்ரசிடம் மிரட்டல் விடுத்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இந்நிலையில் ஹக்கானி குழுவை 'வெளிநாட்டில இயங்கும் பயங்கரவாதக் குழு' என அறிவிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளது. அமெரிக்கா, பாகிஸ்தான் இடையேயான சிக்கல் மேலும் தீவிரம் அடையாமல் இருக்க இரு தரப்பிலும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் கேமரூன் முன்டர் நேற்றுமுன்தினம் மீண்டும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பீரையும், அதிபர் ஆசிப் அலி சர்தாரியையும் சந்தித்தார்.

அதிபர் சர்தாரி, பிரதமர் யூசுப் ரசா கிலானியை சந்தித்துப் பேசினார். பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் மார்க் கிராஸ்மேன் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் உசேன் ஹக்கானியிடம் தொலைபேசியில் பேசினார்.

மிரட்டல் விடுத்த பாஷா: பதட்டத்தைத் தணிக்கும் முயற்சிகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க பதட்டத்தை அதிகரிக்கும் முயற்சிகளும் மறுபுறம் அரங்கேறி வருகின்றன. இரு தரப்பிலும் மீண்டும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகள் அள்ளிவீசப்பட்டு வருகின்றன.

இதன் மையமாக சமீபத்தில் வோஷிங்டனுக்குச் சென்ற ஐ.எஸ்.ஐ தலைவர் அகமது சுஜா பாஷா பாகிஸ்தான் பழங்குடியினப் பகுதிகளில் இனி ஒரு முறை அமெரிக்கா தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்துமானால் அதற்குப் பழிவாங்கும் சூழலுக்கு பாகிஸ்தான் தள்ளப்படும் என சி.ஐ.ஏ தலைவர் டேவிட் பீட்ரசிடம் நேரில் எச்சரித்துள்ளதாக ஐ.எஸ்.ஐ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# 2900 குடியேற்றவாசிகள் அமெரிக்காவில் கைதாகினர்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 2 ஆயிரத்து 900 குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

# விமானக்கொள்வனவு நிதியை பகுதியாகச் செலுத்தியது ஈராக்

அமெரிக்காவிடமிருந்து யுத்த விமானங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியை பகுதியளவில் ஈராக் செலுத்தியுள்ளது.

ஈராக்கிற்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் இந்த விமானங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றது.ஈராக் வான் பரப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கு இந்த விமானங்கள் அவசியம் என வலியுறுததப்பட்டுள்ளது.இந்த விமானங்களை கொள்வனவு செய்வதற்காக இதுவரை 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈராக் செலுத்தியுள்ளது



# பதிவிறக்கப் பெட்டகம்

எழுதுவதற்கு உள்ளார்ந்த தேவை ஒன்று என்னிடம் இருப்பதால் நான் எழுதுகிறேன். மற்றவர்களைப் போல என்னால் சாதாரண வேலைகளைச் செய்ய முடியாது என்பதால் எழுதுகிறேன். நான் எழுதுவதைப் போன்ற புத்தகங்களை நான் வாசிக்க விரும்புவதால் எழுதுகிறேன். உங்கள் அனைவரின் மீதும், எல்லோரின் மீதும் நான் கோபமாக இருப்பதால் எழுதுகிறேன். ஒரு தனியறையில் அடைத்துக்கொண்டு நாளெல்லாம் எழுதுவது எனக்கு விருப்பமாக இருப்பதால் எழுதுகிறேன். நிஜ வாழ்க்கையை மாற்றுவதன் மூலமே என்னால் அதில் பங்குகொள்ள இயலும் என்பதால் எழுதுகிறேன். இஸ்தான்புல்லில், துருக்கியில் எம்மாதிரியான வாழ்க்கையை நாங்கள் வாழ்ந்தோம், தொடர்ந்து வாழ்ந்து வருகிறோம் என்பதை மற்றவர்கள், நாமெல்லோரும், மொத்த உலகமும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதால் எழுதுகிறேன். பேப்பர், பேனா, மையின் வாசைன எனக்குப் பிடித்தமானவை என்பதால் எழுதுகிறேன். வேறு எதனையும்விட இலக்கியத்தின் மேல், நாவல் என்ற கலைவடிவத்தின் மேல் நம்பிக்கை வைத்திருப்பதால் எழுதுகிறேன். அது ஒரு பழக்கம், ஒருவிதமான இச்சை என்பதால் எழுதுகிறேன். நான் மறக்கப்பட்டு விடுவேனோ என்ற பயத்தால் எழுதுகிறேன். எழுத்து அழைத்துவருகிற புகழையும் ஆர்வத்தையும் நான் விரும்புவதால் நான் எழுதுகிறேன். தனியாக இருப்பதற்காக எழுதுகிறேன். உங்கள் அனைவரின் மீதும் எதற்காக நான் மிகக் கோபமாக இருக் கிறேன், எல்லோர் மீதும் ஏன் மிக மிகக் கோபமாக இருக்கி றேன் என்பதை நான் புரிந்துகொள்வதற்காகக் கூட நான் ஒருவேளை எழுதுவதாக இருக்கலாம். நான் வாசிக்கப்பட வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். ஒரு நாவலை, ஒரு கட்டுரையை, ஒரு பக்கத்தை எழுதத் தொடங்கி விட்டேனென்றால், அதை முடிக்க வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். எல்லோரும் நான் எழுதவேண்டும் என்று எதிர்பார்ப்பதால் எழுதுகிறேன். நூலகங்களின் சாஸ்வதத்தைப் பற்றியும், அலுமாரிகளில் என் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருப்பதிலும் எனக்கு ஒரு குழந்தைத்தனமான நம்பிக்கை இருப்பதால் எழுதுகிறேன். வாழ்க்கையின் எல்லா அழகுகளையும் செல்வங்களையும் எழுத்தாக்குவதில் இருக்கும் கிளர்ச்சியினால் எழுதுகிறேன். ஒரு கதையைச் சொல்வதற்காக அல்ல, ஒரு கதையை இயற்றுவதற்காக எழுதுகிறேன். நான் போக வேண்டிய இடம் ஒன்று இருக்கிறது. ஆனால் – ஒரு கனவில் வருவதைப் போலவே – அங்கே என்னால் அடையவே முடியாதிருக்கிறது என்ற துர்சகுனத்திலிருந்து தப்பிக்க விரும்புவதால் எழுதுகிறேன். என்னால் எப்போதுமே சந்தோஷமாக இருக்க முடியாததற்காக எழுதுகிறேன். சந்தோஷமாக இருப்பதற்காக எழுதுகிறேன்.

**– நோபல் பரிசு ஏற்புரையில் ஓரான் பாமுக்**

'எழுத்து என்பது எனக்கு தவம் அல்ல. வேள்வி அல்ல. பிரசவ வேதனை அல்ல. ஆத்ம சோதனையோ, சத்திய சோதனையோ அல்ல. பணம் சம்பாதிக்கும் முயற்சி அல்ல. பேரும் புகழும் தேடும் மார்க்கம் அல்ல. வாழ்க்கையை புரிந்துகொள்ளும் முயற்சி என் சுயத்தை தேடும் முயற்சி!' **– நாஞ்சில்நாடன்**

என்னுள் இருந்து நான் நூற்றெடுத்து என்னைச் சிறையிட்டிருக்கிற இந்தக் கூட்டுக்குள் நான் உண்மையில் சிறகுடன் இருக்கிறேன். **– ஜெயமோகன்**

என் எழுத்து – தெரியாத நிலையிலிருந்து தெரிந்த நிலைக்கு நகர முடியுமா என்ற ஒரு முயற்சி. **– நகுலன்**

எழுத்தாளனாக இருப்பதைத் தவிர வேறு எதுவுமாக என்னால இருக்க முடியாதென்பதால் எழுதுகிறேன்.

**– வாசுதேவன்நாயர்**

என் புனைவிலக்கியங்களில் வருகின்ற அந்தப் பாத்திரங்களைப் படைத்தவன் அதேவேளையில் அவர்களால் படைக்கப்பட்டவனுமாவான். ஒருவகையில், எழுத்துக்கு எழுத்து, வார்த்தைக்கு வார்த்தை, பக்கத்துக்குப் பக்கம், ஒரு புத்தகத்துக்குப் பிறகு மற்றொன்றில் நான் படைத்த பாத்திரங்களை அடுத்தடுத்து எனக்குள் நட்டுவைத்தேன். அவர்கள் இல்லாமல், நான் இன்றுள்ள நபராக இருந்திருக்க முடியாது என்று கருகிறேன். **– ஹோஸெ ஸரமாகோ**

எழுதாவிட்டால் ஒரு உலோகச் சிலை போல நான் வெடித்துச் சிதற நேரும் அல்லது பைத்தியம் பிடித்துவிடும் என்ற நிலை ஏற்படாத வரை நான் எழுத முற்பட்டதில்லை.

ஒரே ஒரு துக்கம்தான் எனக்கு உண்டு. என்னால் எழுத முடிந்தது என் அனுபவங்களின் சாம்பலைத்தான். மனிதன் என்ற விடுகதைக்கு விடை தேடி அலைகிறவர்கள் கடைசியில் என் சுவடுகளை நாடி வருவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. **– டொஸ்ரோயெவ்ஸ்கி**

இந்த சமூகத்தில் எந்த ஒரு விஷயம் என்னை சுலபமாக கடந்து செல்ல அனுமதிக்கவில்லையோ அதைத்தான் அந்த இடத்தில் நின்று எதிர்கொண்டு ஒரு எழுத்தாளனாக நான் எழுதுகிறேன். **– ஆதவன் தீட்சண்யா**

# இலங்கையின் மேலதிக அரிசி ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மேலதிக அரிசியை ஆபிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரின் போது, ஆபிரிக்க தலைவர்கள் இலங்கையிலிருந்து தமது நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யுமாறு வலியுறுத்தியதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கட்டுப்பாட்டுக்கான விசேட குழுவின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதுதொடர்பில் கவனம் செலுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கும், பொருட்களின் விலை அதிகரிப்பை தடுப்பதற்கும் நடவடிக்கை



எடுக்குமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்


# கழிவுத்தேயிலையுடன் நான்கு பேர் கைது

(கொழும்பு)

சுமார் 50 ஆயிரம் கிலோக்கிராம் கழிவுத் தேயிலையுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர். தவுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவெலிகட - அம்பரபொல பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலை ஒன்றிலேயே இந்த தேயிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.அனுமதிப் பத்திரத்தை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே கழிவுத் தேயிலை கண்டுபிடிக்கப்பட்டதாக அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

இதேவேளை கடுகண்ணாவ பிரதேசத்தில் வாகனமொன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட சுமார் 5000 ஆயிரம் கழிவுத் தேயிலையும் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்டுள்ளது. கழிவுத் தேயிலையுடன் வாகன சாரதியும் உதவியாளரும் கைது செய்யப்பட்டு கடுகண்ணாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்

# ஆசிய பிராந்திய நாடுகளின் உறவுகளில் அவுஸ்ரேலியா மீளாய்வு நடவடிக்கை



(கொழும்பு)

வளர்ச்சி பெறும் ஆசிய பிராந்தியங்களுடனான சமூக மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து பாரிய முறையில் மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் கூறியுள்ளது.

ஆசியா தொடர்பான மீளாய்வு அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கில்லாட்டின் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பாக முதலாவது பாரிய நடவடிக்கையாக அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள பிரித்தானிய பொதுநலவாய தலைவர்களின் சந்திப்புக்கான தயார் படுத்தல்களை அவுஸ்ரேலிய மேற்கொண்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அமெரிக்கா ஜனாதிபதி பரக் ஒபாமா அவுஸ்ரேலியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காட்டுத்தீயை கட்டுப்படுத்த சூழல் பாதுகாப்பு குழுக்கள்

(கொழும்பு)

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நுவரெலியா மாவட்டத்தில் சூழல் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மனித செயற்பாடுகள் காரணமாக வனப் பிரதேசங்களில் தீ பரவுவது அதிகரித்துள்ளதாக மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ குமாரசிறி தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியன கூட்டாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸார், இடர் முகாமைத்துவ நிலையம், நுவரெலியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சூழல் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கவுள்ளது.

குறிப்பாக சூழல் பாதுகாப்பு குழுக்கள் மூலம் காட்டுத் தீ தொடர்பில் உடனடித் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தீயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.நுவரெலியா மாவட்டத்தில் இதற்கு முன்னர் இத்தகைய காட்டுத் தீ பரவும் சம்பவங்கள் இடம்பெறவில்லையென சுட்டிக்காட்டிய மாவட்ட செயலாளர், மனித செயற்பாடுகள் காரணமாகவே இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார்



# ஹெலிகொப்டர்களை கொண்டுவர அனுமதிக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு ஹெலிகொப்டர்களை கொண்டு வருவதற்கான அனுமதியை சில நிறுவனங்கள் கோரியுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கிறது.

கடந்த சில தினங்களுக்குள் இரண்டு புதிய ஹெலிகொப்டர்கள் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஹெலிகொப்டர்கள் உள்ளூர் சிவில் விமான சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் கொண்டு' வரப்பட்டுள்ளன. இதேவேளை, ஹெலிகொப்டர் சேவையை வழங்கும் நான்கு நிறுவனங்கள் தற்போது நாட்டில் இயங்குவதாக விமான சேவைகள் அதிகார சபை தெரிவிக்கிறது



**சீனாவின் 62 ஆவது தேசிய தினத்தையொட்டி இலங்கை நட்புறவு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சொமவன்ஸ அமரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் கொழும்பிலுள்ள சீன் தூதுவராலயத்தின் அரசியல் பொறுப்பாளர் ஹான் தானு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.**

# தேர்தல் சட்ட மீறல்கள் திட்டமிட்டு இடம்பெறுகின்றன

(கொழும்பு)

தேர்தல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளில் திட்டமிட்ட முறையில் தேர் தல் சட்ட மீறல்கள் அதிகரித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரை 74 சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். தேர்தலுக்குரிய தினம் அண்மித்து வருகின்ற நிலையில், தேர்தல் சட்ட மீறல்களும் அதனுடன் தொடர்புடைய தேர்தல் வன்முறைகளும் கிரமமாக அதிகரித்துச் செல்கின்றது.

அனுராதபுரம், இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் மாநகர சபை பிரிவுகளில் திட்டமிட்ட முறையிலான தேர்தல் சட்ட மீறல்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக கட்டுப்படுத்த முடியாதவாறு, வாகன ஊர்வலங்களும் பொது

### தேர்தல் கண்காணிப்பகம்

போக்குவரத்து சேவைகளில் பிரசாரங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் பதிவாகி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலுடன் தொடர்புடைய சட்ட மீறல்கள் குறித்து தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்திற்கு இதுவரை 48 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் 16 சம்பவங்கள் நடுத்தரமான மற்றும் பாரதூரமானதாக பதிவாகியுள்ளது என்றும் அந்த நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

எனினும், தேர்தல் தினம் அண்மித்துள்ள நிலையில், ஒரே கட்சி வேட்பாளர்களிடையேயான மோதல்கள் இம்முறை பதிவானதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் தெரிவித்தார்.கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையிலேயே இந்த சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக விலகிய 60ஆயிரம் இராணுவத்தினர் கைதாவர்

(கொழும்பு)

சட்ட விரோதமாக சேவையிலிருந்து விலகியுள்ள 60 ஆயிரம் இராணுவ வீரர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீண்டும் பொது மன்னிப்புக்கான கால அவகாசம் வழங்குவது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்புஆரச்சி தெரிவிதுள்ளார்.

இந்த இராணுவ வீரர்களை கைது செய்த பின்னர், சட்டப்படி இராணுவ சேவையிலிருந்து அவர்களை விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் முதல் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரை சட்ட விரோதமாக சேவையிலிருந்து விலகிச் சென்ற 11 ஆயிரம் இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெற்றோர்களின் விழிப்புணர்வு மூலமே சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கலாம்

## வவுனியா அரச அதிபர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு பெற்றோர்கள் விழிப்புணர்வடைவதுடன் தமது பிள்ளைகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலையில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பை வட மாகாண ஆளுநரிடம் கையளித்துள்ளோம். அதற்கு மேலும் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு காலை 7.30 மணிக்கே அனுப்பவேண்டும். அதேபோல் பாடசாலை விட்டு தமது பிள்ளைகள் குறித்த நேரத்திற்கு வருகின்றார்களா என்பதிலும் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் பாடசாலை விட்டபின்னரும் விசேட வகுப்புகள் மற்றும் பாடசாலை சம்பந்தமான செயற்பாடுகளுக்கு மாணவர்கள் சமுகம் கொடுக்கவேண்டுமாயின் வகுப்பாசிரியரின் எழுத்து மூலமான அனுமதியும் எழுத்து மூலமான கோரிக்கைகளையும் பெற்றோர் பார்வையிடவேண்டும்.

அதன்பின்னரே பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும் எனவும் தெரிவித்ததுடன், தனியார் கல்வி நிலையங்கள் காலை 6 மணிக்கு முன்னரும் மாலை 6 மணிக்கு பின்னரும் வகுப்புகளை நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படவேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டாலே அதனை இயக்க முடியும். அத்துடன், தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் முடிவடையும் வரை பெண் ஊழியர் ஒருவர் பணியில்



இருக்க வேண்டும்.

வவுனியாவில் காணப்படும் இன்ரநெட் கபே அனைத்தையும் பதிவு செய்யுமாறு கூறப்பட்டுள்ளதுடன், பொலிஸாரை திடீர் சோதனை நடத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது. எனவே சிறுவர்கள் இன்ரநெட் கபேக்களை பாவிப்பதை பெற்றோரும், கடை உரிமையாளர்களும் கவனிக்க வேண்டும்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் மற்றும் பேருந்துகள் வவுனியா நகரசபை மற்றும் போக்குவரத்து பொலிஸிலும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# வேப்பமரத்தில் வீழ்ந்தது இடி 30 அடி வரை கிழித்துச் சென்றது

(கனகராயன்குளம்)

கனகராயன்குள பாடசாலைக்கு அருகிலுள்ள தேநீர்க் கடையின் பின் பக்கத்திலிருந்த வேப்பமரமொன்றின் மீது இடி விழுந்ததினால் அப்பகுதியில் நேற்று மிகவும் பரபரப்பான நிலை காணப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் பகல் 1.30 மணியிலிருந்து கனகராயன் குளப் பகுதியில் பலத்த மழை பெய்தது. இதன்போது பலத்த இடி, மின்னலின் தாக்கமும் காணப்பட்டது. இந்த நேரம் பிற்பகல் 2.05 மணியளவில் குறித்த பகுதியிலுள்ள தேநீர்க் கடையின் பின்பக்கத்திலிருந்த வேப்ப மரத்தின் மீது பலத்த சத்தத்துடன் இடி தாக்கியதனால் வேப்பமரம் முப்பது அடி வரை கிழிக்கப்பட்டதுடன், அப்பகுதி பாடசாலை மாணவர்களும் அலறியடித்து அச்சமடைந்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பாடசாலை வளாகத்திலிருந்த வேப்பமரமொன்றின் மீதும் இடி தாக்கியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புளியங்குளம் பகுதியில் நேற்று மழையுடன் பலத்த காற்றும் வீசியதனால் அப்பகுதி பொலிஸ் நிலையத்தின் கூரைப்பகுதியிலிருந்த ஓடுகள் நாலாபுறமும் சிதறி வீசப்பட்டன. அத்துடன், மீள் குடியேறி இதுவரை நிரந்தர வீடுகளை அமைக்காத குடும்பங்களும் பெரும் சிரமங்களை அடைந்த நிலையில் காணப்பட்டனர். (12)

# பணிப்புறக்கணிப்பு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றில் இடம்பெற்று வந்த சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு தொடர்பான கூட்டம் நேற்றுக்காலை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

சட்டத்தரணிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதையடுத்தும், ஏழு பொலிஸாரும் நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பை நிறுத்தி இன்று முதல் தமது கடமைகளில் ஈடுபடவுள்ளனர். (எஸ்)

# சமவுடைமை சமுதாயத்திற்கு முன்னுதாரணம் சீனா

நாட்டில் சமவுடைமை சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்கு சீனாவின் அனுபவங்கள் மிக முக்கியமானதாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எமது கொள்கையின் கடைசி இலக்கும் கடைசி எதிர்பார்ப்பும் சமவுடைமை சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

அதனை இலங்கை பூமியில் சரியாக நிறைவேற்ற சிறந்த அனுபவத்தைப் பெற வேண்டியுள்ளதுடன், சீனா பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியாகவும் பெற்றுள்ள வெற்றியை இலங்கை அரசியலில் அனுபவமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## விடுதலைப் புலி....

வரி சேகரிப்புப் பிரிவில் தாம் கடமையாற்றி யதாகக் குறிப்பிட்டுள்ளார். திருநெல்வேலி, சங்கானை போன்ற பிரதேசங்களில் வரி சேகரிப்பாளராக கடமையாற்றியதாகவும், அதற்காக புலிகள் சம்பளம் வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போது, புலிகள் அமைப்பிலிருந்து விலகியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் பாதுகாப்புப் படையினர் கைது செய்ததாகவும், இலஞ்சம் வழங்கி விடுதலையானதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் பிரித்தானியாவில் புகலிடம் கோரியதாகவும், புகலிடம் நிராகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி கனடாவிற்கு சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், கனடிய சட்டங்களின் அடிப்படையில் குறித்த நபர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தவில்லை எனவும், இதனால் யுத்த குற்றவாளியாக அடையாளப்படுத்துவது நீதியானதல்ல எனவும் புவனேசன் துரைராஜாவின் சட்டத்தரணி நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், குறித்த நபரை நாடு கடத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## மாநகர.....

வரவேற்றனர். முதல்வர் அவர்கள் கடந்த மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது அவர் சமுகமளிக்காமை குறித்து சில சட்டச் சிக்கல்கள் காரணமாக தம்மால் தெளிவுபடுத்த முடியவில்லை எனக் கூறினார். எனவே நடந்தவற்றைச் சபையில் கோமகனைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து தமது கைது குறித்து சக உறுப்பினர்களுக்கு விரிவாக அவர் எடுத்துரைத்தார்.

கடந்த மாதாந்தக் கூட்டங்களின் போது தமது விடுதலை குறித்து மாநகரசபையில் பிரஸ்தாபித்த சக மாநகர சபை உறுப்பினர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் நேற்றைய மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தின் போது கோமகனிற்கு வாக்களித்தவர்களும், அவரது உறவினர்களும் சமுகமளித்திருந்தனர். அவ்வேளை அவர் உறவினர்களுடன் அளவளாவியதையும் அவதானிக்க முடிந்தது.

கடந்த 23.08.2010 அன்று காலை 10.00 மணிக்கு கொழும்பில் இருந்து வந்த குற்றத்தடுப்பு புலனாய்வுத் துறையினரால் இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கொழும்பு நாலாம் மாடியிலும் இறுதியாகப் பூசா தடுப்பு முகாமிலும் கடந்த ஒரு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் பிரதேச செயலக கலாசார விழா இன்று

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், சித்தாந்த பாரதி சிவராமலிங்கம் பிள்ளை அரங்கில் முதலாம் நாள நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வி.க.கணேசலிங்கம் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி அரங்கில் நாளை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் இந்திய துணைத் தூதுவர் வெ.மகாலிங்கம், சிறப்பு விருந்தினராக வடமாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி கலாசார விழாவில் 2011 ஆம் ஆண்டுக்கான கலைஞானச் சுடர் விருதினைப் பின்வருவோர் பெறவுள்ளனர். செல்லப்பா நடராசா - ஊடகத்துறை, ம.பார்வதிநாதசிவம் - கவிதை, சந்திரா சரவணமுத்து - கிராமியக கலை, ஆ.கந்தசாமி - சிற்பம், க.சுந்தரலிங்கம் - ஓவியம், பத்தினியம்மா திலகநாயகம் போல் - புனைகதை, தம்பு சிவலிங்கம் - நாடகம், வி.சிவஞானசேகரம் - கர்நாடக இசை, வி. கோ.பஞ்சமூர்த்தி - நாதஸ்வரம், செ.திருநாவுக்கரசு - இலக்கியம். (26)

## கோண்டாவிலில்....

சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபரை அங்கொடை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்குமாறு உத்தரவிட்ட யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராசா வழக்கினை அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

## நயினாதீவுக்கு.....

போது தவறி கீழே வீழ்ந்தான். கீழே வீழ்ந்ததை அறியாத சாரதி பஸ்சினை நகர்த்திய போது சில்லில் சிக்கிய மாணவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த ஊர்காவற்துறை நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## மின்விநியோக...

அழைப்பை அடுத்து குறிப்பிட்ட பணியில் ஈடுபடும் ஏழு தொழிலாளர்கள் மின் கம்பங்களில் ஏறி மின் கம்பிகளைக் கழற்றி நிலத்தில் போடும் பணியில் ஈடுபட்டனர். திடீரெனக் கம்பிகளில் மின்சாரம் பாய்வதை உணர்ந்த பணியாளர்கள் கம்பங்களை விட்டு கீழே இறங்கியுள்ளனர். ஆனாலும், குறிப்பிட்ட இளைஞன் மட்டும் இறங்க முடியாத நிலையில் கம்பத்தில் நின்றமையால் உடனடியாக இறங்க முடியாத நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்தாகத் தெரிவித்தனர்.


இவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (11)

## செய்திப்பாணம்

**முட்டாளின் இதயம் மூர்க்கமாக வாயில்வரும்**
**பட்டறிவார் வாயிதயம் பதுங்குமாம் - வெட்டென**
**செதுக்கிய வார்த்தை சொல்வதெது மரபணுக்கள்**
**புதுக்கவா செல்லும் புவி!**



# பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் வரவு செலவுத் திட்ட ஆராய்வுக் கூட்டம்



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினது 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான முன்மொழிவுக்கான ஆராய்வுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் இடம் பெற்றது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சினது கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் பிரசன்னத்துடன் ஆராய்வுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன் பிரகாரம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை, வடகடல் நிறுவனம், ஆனையிறவு உப்பளம் ஆகிய நிறுவனங்களுடன் கித்துல் அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்ட பல முன்மொழிவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க அவர்களுடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராஜசிங்கம் உள்ளிட்டோருடன் நிதியமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் குறித்த நிறுவனங்களினது தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், துறைசார்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாடு கடத்துவோரின் பாதுகாப்பை ஐ.ஓ.எம். உறுதிப்படுத்தமாட்டா

(கொழும்பு)

பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பும் அகதிகளுக்கு அங்கு பாதுகாப்பு தொடர்பில் உத்தரவாதம் எதனையும் தரமுடியாது என அகதிகள் தொடர்பான விடயங்களை கையாளும் ஐ.ஓ.எம். அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.எம். அமைப்பே அகதிகளைத் திருப்பி அனுப்பும் போது அவர்களுக்கான வழிப் பயண ஏற் பாட்டை செய்கிறது. பிரிட்டனில் நேற்று முன்தினம் இறுதி நேரத்தில் கூட நாடு கடத்தப்படுவோரின் சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களின் பாதுகாப்பு குறித்து ஐ.ஓ.எம் என்ற சர்வ[...] புலம்பெயர் அமைப்பு[...] பேச்சு நடத்தினர், எனி[...] அந்த அமைப்பு, நாடுகடத்[...] படுவோரின் பாதுகாப்பு கு[...] தம்மால் உறுதிப்பாட்[...] தெரிவிக்கமுடியாது எ[...] தெரிவித்துவிட்டது.

50 இலங்கைத் தமிழர்க[...] நாட்டுக்குத் திருப்பி அனுப்[...] தற்காக விமானத்தினை பி[...] தானிய எல்லை பாதுகா[...] முக வரமைப்பின் அதிகாரி[...] தயார்படுத்திய போது ப[...] வேறு மனித உரிமை அமை[...] புகளும், இலங்கைத் தமிழர்[...] நாடு திருப்பப்படின் கொ[...] மைக்கு உள்ளாகலாம் எ[...] எச்சரித்திருந்தனர்.

# மார்பகப் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகத் தகவல்

(கொழும்பு)

கடந்த இரண்டு தசாப்தங்களுள் இலங்கையில் மார்பகப் புற்றுநோய் வீதம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2005 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பெண்களில் 18.4 சதவீத பெண்கள் மார்பகப்புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது அது 25 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் 50 தொடக்கம் 69 வயதான பெண்களே அதிகம் உள்ளடங்கியுள்ளனர்

இதனடிப்படையில் எதிர்வரும் மாதத்தை, புற்றுநோயை முன்கூட்டியே அறிந்து கொள்வது தொடர்பான மாதமாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

# வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 10 ஆயிரம் சைக்கிள்கள் வழங்கல்

(கொழும்பு)

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு 10,000 துவிச்சக்கர வண்டிகள் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே 67 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த 10,000 துவிச்சக்கர வண்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென வழங்கப்படவுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது, இயல்பு நிலைக்கு மீளத் திரும்புவதற்கு அவசியமானதும் வயது, பால் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி முழு சமூகத்தினாலும் பயன்படுத்தப்படுவதுமான சாதனமாக துவிச்சக்கர வண்டிகள் அடையாளம் காணப்பட்டதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இத்துவிச்சக்கர வண்டிகளை தயாரித்து விநியோகிப்பதற்கான ஒப்பந்தங்களை இந்தியாவின் முன்னிலை நிறுவனமொன்றுக்கு இந்திய உயர் ஸ்தானிகராலய[...] வழங்கியிருந்தது. நவம்பர் மா[...] முற்பகுதியில் உரிய பயனா[...] ளுக்கு இவை வழங்கப்படவுள்[...]

இதேவேளை குறித்த து[...] சக்கர வண்டிகள் பொருத்[...] நிரந்தர நிலையமொன்றை வ[...] னியா நகரில் அமைப்பதற்[...] மேற்படி துவிச்சக்கர வண்[...] விநியோக நிறுவனம் இண[...] யுள்ளது. இதனால் உள்[...] மக்கள் பலருக்கு தொழ[...] வாய்ப்பும் கிடைக்கும் என இ[...] திய உயர் ஸ்தானிகரலாய[...] தெரிவித்துள்ளது.

# சுனாமி அனர்த்தப் பகுதிகளின் மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சி

(கொழும்பு)

இலங்கையில் சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன

தென்மாகாணத்தில் இது ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகளை இலங்கை நீச்சல் பயிற்சித் திட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இந்து சமுத்திரத்தில் சுமாத்ரா அருகே கடலுக்கு கீழான பாரிய நில அதிர்வை அடுத்து சுனாமி ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்தியது.

எதிர்காலத்திலும், இவ்வாறான அவசர நிலைமைகள் ஏற்படின் அதிலிருந்து பாதுகாப்பு பெறும் நோக்காகவே இந்த நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

# யாழ் – வெள்ளவத்தை தனியார் பஸ் சேவை பாதுகாப்புச் செயலருடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான தனியார் பேருந்து சேவைகள் வெள்ளவத்தையில் இருந்து புறப்படுவதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றமை தொடர்பான கூட்டம் நேற்று முற்பகல் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தலைமையில் கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் தனியார் பேருந்து உரிமையாளர்கள் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்துக்கான பேருந்து சேவைகள் வெள்ளவத்தையில் இருந்து புறப்பட வேண்டிய அவசியம், மற்றும் ஏ-9 வீதிகளில் நள்ளிரவு வேளைகளில் பேருந்துகள் பயணிக்கும் போது இனம் தெரியாத நபர்களினால் கற்கள் வீசப்படுகின்றமை குறித்து பேருந்து உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தி தீர்வு ஒன்றை பெற்றுத்தருவதாக பிரபா கணேசன் உறுதியளித்துள்ள[...]

வெள்ளவத்தையில் பே[...] கள் தரித்து நிற்பதற்கும் பய[...] களை இறக்கி ஏற்றுவதற்[...] போதிய இடவசதிகள் இல்[...]

வெள்ளவத்தை கடற்க[...] வீதியில் பேருந்துகள் தரித்து [...] பதனாலும் அங்கிருந்து பய[...] களை ஏற்றுவதாலும் வெ[...] வத்தை கடற்கரை வீதி, க[...] வீதியில் போக்குவரத்து நெரி[...] ஏற்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக [...] பட்டிருந்த இந்த இழுபறி நி[...] யில் நேற்று முற்பகல் இ[...] பெற்ற கூட்டத்தில் தற்காலிகம[...] வெள்ளவத்தையில் இருந்[...] பேருந்துகள் பயணிக்க அனு[...] வழங்குவது என பிரபா க[...] சன் அறிவித்தார்.

பிரபா கணேசனின் எற்ப[...] டில் பேருந்து உரிமையாளர்[...] பாதுகாப்பு செயலாளரை நா[...] சந்திப்பர் என எதிர்பார்க்கப்[...] கின்றது.

# கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் அதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் காலை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம், வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சம்பியன்ஸ் லீக் ருவென்ரி –20

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் எதிர் கொல்கத்தா நைட்றைடர்ஸ்



பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 169/9 (20 ஓவர்)
கொல்கத்தா நைட் றைடர்ஸ் 171/1 (17.3 ஓவர்)
9 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வெற்றி.

# சடுதியாக அதிகரிக்கிறத[...] சிறுவர் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் துரிதகதியில் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 398 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜீலை 31 ஆம் திகதி வரையா[...] காலப்பகுதியினுள் 3451 சிறுவ[...] துஷ்பிரயோக சம்பவங்கள் பதி[...] செய்யப்பட்டுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோக[...] சம்பவங்களில் ஈடுபடுவோருக்[...] மரணதண்டனை வழங்க வே[...] டும் என்ற கருத்தினை தேசி[...] சிறுவர் பாதுகாப்பு அதிகா[...] சபை தலைவர் அனோமா திச[...] நாயக்க, சிறுவர் அபிவிருத்தி[...] மற்றும் பெண்கள் நடவடிக்கை[...] கள் அமைச்சர் திஸ்ஸ கரலிய[...] தவின் கவனத்திற்கு கொண்[...] வந்துள்ளமை குறிப்பிடத்தக்க[...]

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியி[...]ப்பட்டது.